Registered as a news paper. FREE COPY NOT FOR SALE

பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
மகாராசி சில்க்ஸ்
மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P.No : 0777286247.
(அ/2203)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 றஜப் 01 (18.08.2004) புதன்கிழமை இதழ்:320

# முல்லைத்தீவு சாலை கடற்பரப்பில் சந்தேகமான இழுவைப் படகிலிருந்து புலிகள் ஆயுதங்களை இறக்கினராம்!

## கண்காணிப்புக்குழுவிடம் கடற்படை புகார்

(கொழும்பு)

**முல்லைத்தீவுக் கடற்பரப்பில் காணப்பட்ட சந்தேகத்துக்கிடமான இழுவைப் படகு ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகள் ஆயுதங்களைத் தரையிறக்கியதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் கடற்படையினர் முறைப்பாடு செய்துள்ளனர்.**

**நேற்றுமுன்தினம் அதிகாலை முல்லைத்தீவு சாலைக் கடற்பரப்பில் வைத்து சந்தேகத்துக்கிடமான இழுவைப் படகிலிருந்தே ஆயுதங்கள் இறக்கப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்தது.**

சாலைக் கடற்பரப்பில் காணப் பட்ட சந்தேகத்துக்கிடமான கப்பல் ஒன்றைக் கடற்படையினர் நேற்று முன்தினம் அதிகாலை அவதானித் தனர்.

மூன்று கடற்படைப் படகுகள் இந்த இழுவைப் படகை அவதானித் தன. இந்தக் கடற்படைப் படகுகளில் ஒன்றில் போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு பிரதிநிதிகள் இருவர் இருந் தனர்.

சந்தேகத்துக்கிடமான கப்பல் அருகே கண்ணாடி இழைப் படகு கள் காணப்பட்டன. இவற்றில் ஒன்று புலிகளின் அதிவேகத் தாக்குதல் படகாகும்.

இழுவைப் படகிலிருந்து மற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல் படையினரை விடுவிப்பதற்கு கண்காணிப்புக்குழு முயற்சி!

(திருகோணமலை)

திருகோணமலை - திரியாய் பகுதி யில் தமிழீழ விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட இரண்டு ஊர் காவல்படையினரை விடுவிக்க போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு முயற் சிகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி ஆயுதங் கள் சகிதம் பொதுமக்கள் ஐவருடன் சேர்நது குறிப்பிட்ட ஊர்காவல் படை யினர் மீன்பிடித்துக்கொண்டிருக்கை யிலேயே புலிகளால் கைதுசெய்யப் பட்டனர். எனினும் ஏனைய ஐவரும் ஏற்கனவே விடுவிக்கப்பட்டனர் என் பது குறிப்பிடத்தக்கது.

## பட்டதாரிகள் நியமனம் கடிதம் அனுப்பும் பணிகள் ஆரம்பம்!

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலை வழங் கும் பணிகள் அடுத்த மாதம் இரண் டாம் திகதி ஆரம்பமாகவிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட 17 ஆயிரத்து 23 பட்டதாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பும் பணியை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நேற்று ஆரம்பித்தது.

வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் படும் பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் 6000 ரூபா மாதாந்தக் கொடுப்பன வாக வழங்கப்படும்.

பட்டதாரிகள் பயிற்சிமுடிந்த பின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி அபாயம் காரணமாகவே இழுவைப்படகை சோதனையிடவில்லை!

### புலிகள் தடுக்கவில்லை என்கிறார் புறூவ் ஹொவ்டே

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் காணப்பட்ட சந்தேகத்துக்கிடமான இழுவைப்படகைச் சோதனையிடு வதற்கு விடுதலைப் புலிகள் தடுத் தார்கள் என்பது தொடர்பாக சரி யான தகவல்கள் இல்லை.

கண்ணிவெடி அபாயம் இருந்த மையாலேயே அப்பகுதிக்குள் ரோந்து செல்லவில்லை என்று போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழுவின் தலை வர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ். ஹொவ்டே தெரித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

புலிகள் என்ன கொண்டுவந்து திருக்கிறார்கள் என்பதற்கு சான்றெ துவும் இல்லை. அங்கு இழுவைப் படகு இருந்தது. அதனருகே வேறொரு படகும் நின்றது.

கடற்படைக் கப்பல் இதை அவ தானித்தது அவ்வளவு தான். கடற் படைக்கப்பலில் எமது பிரதிநிதி ஒரு வர் இருந்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்பாளர் கள் இருந்த படகு அந்த இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

புலிகள் இழுவைப்படகைச் சோத னையிட முயன்றதைத் தடுத்தார்கள் என்பதில் சரியான தகவல் இல்லை. அந்தப்பகுதியில் கடலகண்ணி அபா யம் இருப்பதாக எங்களுக்கு எச் சரிகை வந்தது. அப்படி இருக்கை யில் நாங்கள் அப்பகுதிக்கு ரோந்து செல்ல அனுமதிக்கவில்லை. அத னால் தான் அவ்விடம் செல்ல வில்லை.

இது பற்றித் தற்போது எதுவும் செய்யப்போவதில்லை. கண்காணிப புக் குழுவின் கப்பல்களில் இருந்து தகவலுக்காகக் காத்துக்கொண்டிருக் கிறோம் என்றார் அவர்.

## இலங்கைக்கான விஜயத்தை ஹெல்கிசன் ஒத்திவைப்பு!

இந்தவாரம் கொழும்பு வரத் திட்ட மிட்டிருந்த நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல் கிசனின் விஜயம் ஒத்திவைக்கப்பட் டுள்ளதாகத் தெரியவருகிறது.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூத ரக வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டபோதும் அதற்கான கார ணம் எவையும் அறிவிக்கப்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார யோசனை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தைக்குத் தயா ராகவிருப்பதாக தெரிவித்ததையடுததே நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரின் வருகை இடம் பெற விருந்தது.

இதற்கிடையில் தமிழீழ விடுத லைப்புலிகளின் இடைக்காலத் தன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலிய ஊழியர்களின் ஜனாதிபதியுடனான சந்திப்பு இன்றைய தினமே நடைபெறும்!

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையி லான குழுவுக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த முக்கிய சந்திப்பு இன்று காலை 10 மணிக்கு இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி யுடன் எரிபொருள், மின்சக்தித்துறை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவும் கலந்துகொள்வார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தின் 33 வீதமான பங்குகளை இந் திய நிறுவனம் ஒன்றுக்கு அரசாங் கம் வழங்க முயற்சிப்பதாகக் குற்றம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுப்பற்றாளர் இரத்தினத்துக்கு கிளிநொச்சியில் நேற்று அஞ்சலி!



தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு தனது ஆற்றலை கணிச மான அளவு வழங்கிவந்த நாட்டுப் பற்றாளர் செல்லையா இரத்தினத்தின் அஞ்சலி நிகழ்வு நேற்று கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள சிரான் பணிமனை யிலும், தூயவன் அரசறிவியல் கல்லூரியிலும் இவரது பூதவுடல் அஞ் சலிக்காக வைக்கப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் மற்றும் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டாய மதமாற்ற தடைச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது!

### உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

கட்டாய மதமாற்றத்தை தடைசெய் வது தொடர்பான பிரேரணையின் 3 ஆம் மற்றும் 4 ஆம் பந்திகள் அரசியலமைப்பின் 10 ஆவது பந் திக்கு முரண்பாடாக அமைந்துள்ள தாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது.

இந்தத் தீர்ப்பை நேற்று நாடா ளுமன்றம் கூடியவேளையில் சபாநா யகர் லொக்குபண்டார வெளியிட் டார்.

குறிப்பிட்ட பிரேரணையை நாடா ளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டு மானால் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும், சர்வசன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டு மென உயர் நீதிமன்றம் தெரிவித் துள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட் டார்.

இதேவேளை - குறிப்பிட்ட பிரே ரணையில் மேலும் சில பந்திகள் திருத்தங்களுக்கு உட்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித் துள்ளதாகவும் சபாநாயகர் தெரிவித் தார்.

குறிப்பிட்ட 3 ஆம் பந்தியில் மதமாற்றம் செய்யப்படும்போது அது தொடர்பில் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட வேண்டுமெனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

ஜனாதிபதியால் உயர்நீதிமன் றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நீதி சீர்திருத்த பிரேரணை மற்றும் தேர்தலில் அடையாளத்தை நிரூபிக் கும் திருத்தப் பிரேரணை என்பன அரசியல் அமைப்புக்கு உட்பட் டவை என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையும் நேற்று சபாநாயகர் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு - கிழக்கு மாகாணசபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கோட்)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## " ஆ அவ " கடன் இல. 1846 - SRI (SF)

## கேள்வி அறிவித்தல் 32
## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி கருத்திட்டத்தின் (நீக்கோட்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்பட்டுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்த்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ருபா) |
|---|---|---|---|---|
| 01 | MN/NECORD/WS/03 | மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம் புனர்நிர்மாணம் | M4 நீர்வழங்கல் | 219,000/= |
| 02 | AM/NECORD/IR/02 | அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச் சாறு நீர்பாசனத்திட்டம் புனரமைப்பு - தொகுதி 6 | M7 நீர்ப்பாசனம் | 37,000/= |
| 03 | AM/NECORD/IR/02 | அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச் சாறு நீர்பாசனத்திட்டம் புனரமைப்பு - தொகுதி 7 | M7 நீர்ப்பாசனம் | 37,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M 7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்பதிகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ஆந் திகதிக்கு பின்பு தங்களை ஒப்பந்தகாரர்களாக பதிவு செய்து ஒத்த தன்மையான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ செய்து திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்பட [illegible]காது.

5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026 - 2227434. தொலைநகரி 026 - 2227401 மின்னஞ்சல் necord@sltnet.lk).

6. ஒப்பந்த ஆவணங்களை 2004 ஆவணி 19 இருந்து 2004 புரட்டாதி 3 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்தி கொள்வனவு செய்யப்படலாம்.

7. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

8. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் (தலைவர், கேள்விச்சபை, NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை) என்ற முகரிவக்கு 2004 புரட்டாதி 10 முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகோருவோர் அல்லது அவர்க ளது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கமுடியும்.

9. முன்கூட்டியே ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 புரட்டாதி 3 ஆம் திகதி 11.30 இற்கு NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலையில் நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாகமாட்டார்.

திரு.த.லங்காநேசன்,
கேள்விச்சபை தலைவர்,
NECOR, 140, மின்சாரநிலைய வீதி,
திருகோணமலை.

(சி-2950)


# போக்குவரத்துச் சபையின் உபதலைவர் நெடுந்தீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம்!

இலங்கை மத்திய போக்குவரத்துச்சபையின் உபதலைவர் நிஹால் பெரேரா தலைமையிலான உயர் மடடக்குழுவினர் நேற்றுக்காலை நெடுந்தீவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டனர்.

நெடுந்தீவில் - மக்களுக்கும், போக்குவரத்துச்சபைக்குமுள்ள தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும், நெடுந்தீவு சாலையின் நிலைமைகளை அறிந்துகொள்வதற்குமே இவர்களது இந்த விஜயம் அமைந்திருந்தது.

மேலும், ஏற்கனவே பழுதடைந்த நிலையில், சேவையில் ஈடுபடாமலுள்ள பேரூந்தினை யாழ்ப்பாணம் கொண்டுவந்து திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் -

நெடுந்தீவு கிழக்குப் பகுதிக்கான சேவையினை ஆலமாவனப் பிள்ளையார் கோவில்வரை விஸ்தரிக்க வேண்டுமென மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையை பரீசிலனை செய்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தக்குழுவினரில் - பணி இயக்குநர் டி.சி.பெர்னாண்டோ, பிரதான கணக்காளர் உபாலி பிரான்சிஸ்கோ, பணிஇயககுநர் எம். டபிள்யூ அரியதாச மற்றும் வட பிராந்திய பொது முகாமையாளர் எஸ்.கணேசலிங்கம் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இவர்கள் நெடுந்தீவின் சகல இடங்களுக்கும் சென்ற பின்னர் நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ்நகர் திரும்பினர். (113)

## பாராட்டு விழா

கொரியாவில் நடைபெற்ற 22 வயதிற்குட்பட்டவர்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் 2.04 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்ற சிவகுமார் கமலமோகனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும், பாடசாலை சமூகமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (72)

## விளையாட்டு விழா

அமரர் டாக்டர் பொன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் அல்வாய் வடக்கு இளங்கோ மழலைகள் கல்விப் பூங்காவின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இளங்கோ சனசமூக நிலையத் தலைவர் மு.ராஜவரோதயன் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில் - பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வடமராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் வி.வ்ர்ணா, அதிபர் எஸ்.செல்வச்சந்திரன், கிராம அலுவலர் ஏ.பத்திநாதர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

## மாணவன் நினைவாக மரதன் ஓட்டப்போட்டி

நாவற்குழி மகா வித்தியாலய மாணவன் குலேந்திரன் மேகலனின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, இன்று நாவற்குழியில் 10 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த மரதன் ஓட்டப்போட்டி காலை 6 மணிக்கு நாவற்குழிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது. (31)


நாகம்ஸ் சுன்னாகம்

ஷியாம், திரிஷா, மாதவன், விவேக் நடித்த
லேசா லேசா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
நாளை முதல் அன்பு சகோதரன்

நிறைஞ்சனாஸ் சங்கானை
அரவிந், சோனா, ரகுவரன் நடித்த
கையோடு கை
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
ROAD TRIP
(சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்னும் சில தினங்கள் மட்டும்
கமல், சினேகா, பிரபு நடித்த
வசூல்ராஜா MBBS
விரைவில் விஜய் நடித்த மதுர
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2725)



# கண்ணீர் அஞ்சலி

## செல்லையா இரத்தினம்

எமது முன்னாள் சமுர்த்தி முகாமையாளரும், தற்போதைய தீவக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளருமான கு. கருணாநிதி அவர்களின் அன்பு மாமனார் செல்லையா - இரத்தினம் அவர்களின் திடீர் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலம்,
நெடுந்தீவு.

(சி/2952)



# சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் நோயாளர் சேவைக்கு ஆள் சேர்ப்பு

சென்ஜோன்ஸ் அம்புலன்சினால் யாழ். போதனா வைத்தியசாலையில் நடாத்தப்படும் நோயாளர் சேவைக்கு ஆள்கள் (ஆண் பெண் இருபாலர்களும்) தேவை. இதற்கான ஊக்குவிப்பு தொண்டர் கொடுப்பனவாக நாள் ஒன்றிற்கு ரூபா 220/= வதிலிருந்து ரூபா 250/= வரை வழுங்கப்படும். இச்சேவையில் சேர விரும்புபவர்கள் 22.08.2004 ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் காரியாலயத்திற்குச் சமூகம் தரவும்.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
யாழ்.போதனா வைத்தியசாலை.
தொலைபேசி இல. 222 3166

(909)

பிரதம ஆணையாளர்,
சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
தேசிய தலைமையகம்.

### மாற்றுத் தீர்வுத் திட்டத்தின்படி

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வரி அறவிடும் அதிகாரம் அவர்களுக்கே

## அரச சமாதானச் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வரியை அறவிடும் அதிகாரத்தை அவர்களுக்கே வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான ஆலோசனைகளுக்கு மாற்றாக, அரசு சமர்ப்பிக்கவுள்ள இந்த ஆலோசனைகளிலேயே இந்த ஆலோசனை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரச சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்லப்படும் பொருட்களுக்கும், அந்தப் பிரதேசங்களில் நடைபெறுகின்ற சேவைகளின் பொருட்டு வரியை அறவிடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அதிகாரத்தை ஒப்படைப்பதோடு -

அதன்போது அறவிடப்படும் வரியில் ஒரு சதவீதத்தை மட்டும் அரசாங்கம அறவிடுவதற்குத் தீர்மானிததிருப்பதாகத் அரசின் சமாதானச் செயலகச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு நடவடிக்கைகள், காணி நடவடிக்கைகள், சட்ட நடவடிக்கைகள் என்பன அரசின் நிர்வாகத்தின்கீழ் இடமபெறும் எனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிப்பதும், அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பைத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் நீதித்துறை நடவடிக்கைகளை அரசாங்கத்தின் நிர்வகிப்பதற்கு, தீர்மானிக்கப்பட்டுள்ளபோதும், தற்போது நடைமுறையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் காவற்துறை மற்றும் நீதிமன்றங்கள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதுபற்றி புதிய ஆலோசனைகளில் வெளிப்படுத்தப்படவுள்ளது.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் அபிவிருத்திக்கு வழங்குவதற்கும் அந்தத் தொகையை இடைக்கால நிர்வாக சபை ஆலோசனைகளுக்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிகளினதும், அரசினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கி அமைக்கப்படும் நிர்வாக அதிகார சபையிடம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடககு - கிழக்கு கடல் வலயததின் பாதுகாப்பு தொடர்ச்சியாகக் கடற்படையின்கீழ் இருக்கவேண்டும். அத்துடன் கடற்படையினரின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு குழுவொன்றையும் நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## திருமலை கடற்கரை சேனையில் கிராமிய அபிவிருத்தி வங்கி திறப்பு

கிராமிய அபிவிருத்தி வங்கியின் எட்டாவது கிளை நேற்றுமுன்தினம் முற்பகல் 10.00 மணிக்கு கடற்கரைசேனை - நாவலடிச் சந்தியில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், மங்கள விளக்கினை திருமலை சந்தோசபுர பாடசாலை அதிபர் நவட்ணராசா, இளஞ்சுடர் விவசாய சம்மேளனத் தலைவர் கிருஸ்ணமூர்த்தி, மூதூர் காவலதுறை உதவிப் பொறுப்பாளர் தேவதாஸ் ஆகியோர் ஏற்றினர்.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ப.சுஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

தமிழீழ தேசியக் கொடியினை மூதூர் கோட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் நளினி ஏற்றினார். வங்கியின் பெயர்ப்பலகையினை தளபதி வசந்தன் திரைநீக்கம் செய்துவைத்தார். வங்கிக் கட்டடத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் மதன்ராஜ் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

சிறப்புரையினை அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன் ஆற்றியதுடன், வங்கி நடவடிக்கையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் வங்கியில் முதலாவது பயனாளிக்குரிய கடனை வழங்கிவைத்தார். கிராமிய அபிவிருத்தி வங்கியினால் கல்வி எழுச்சி நிதி என்ற திட்டத்தின்கீழ் மூன்று மாணவர்கள் முதற்கட்டமாக இந்த நிகழ்வில் இணைக்கப்பட்டனர்.

# முன்னாள் அமைச்சர் அப்துல் காதருக்கு முப்பதாம் திகதிவரை விளக்கமறியல்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கூட்டுறவு அமைச்சருமான அப்துல் காதரை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாக அப்துல் காதர்மீது குற்றஞ்சாட்டி கடந்த 10 ஆம் திகதி பொலிஸார் கைதுசெய்தனர்.

கொழும்பு பிரதான நீதிமன்றத்தின் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை நேற்றுமுன்தினம்வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

அப்துல் காதர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதான நீதவான் திஸரா சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் பொதுமக்களின் நிதியிலிருந்து 10 லட்சம் ரூபா நிதியினைத் தவணைமுறையில் கையாண்டதற்கான அறிக்கையை ஊழல் மோசடி புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இதனையடுத்து அப்துல் காதருக்குப பிணையை வழங்குமாறு கோரியதுடன், வீட்டுக்குத் திரும்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## நாடு திரும்பிய அகதிகளை சொந்த இடத்துக்கு அனுப்ப உத்தரவு

இராமேஸ்வரத்திலிருந்து நாடு திரும்பிய 19 அகதிகளையும் அவர்களது சொந்தப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் இவர்களைத் தலைமன்னாருக்கு அழைத்து வந்த மூன்று மீனவர்களையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்த அகதிகள் நாடு திரும்பியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இராணுவச் சிப்பாயின் வீட்டின்மீது துப்பாக்கிப் பிரயோகம்

இராணுவச் சிப்பாய் ஒருவரின் வீடுமீது இனந்தெரியாத குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகப் படைத்தலைமையகம் தெரிவித்தது. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மன்னம்பிட்டிய என்ற இடத்தில் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளை குறித்த வீட்டில் எவரும் இருக்கவில்லை எனவும், இது திட்டமிட்ட ஒரு தாக்குதல் எனவும் படைத்தலைமையகம் மேலும் தெரிவித்தது.

## போலி யூரோ நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன

(கொழும்பு)

இலங்கையில் முதற்தடவையாக போலி யூரோ நோட்டுக்கள் பிடிபட்டுள்ளன. போலியான யூரோ நோட்டுக்கள் மற்றும் அமெரிக்க டொலர்களை அச்சடித்து பலநாடுகளிலும் விநியோகித்துவரும் சர்வதேச மட்டத்திலான வியாபாரத்தை வெளிப்படுத்தியதோடு, அந்த வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த இருவரையும், இலங்கையர் இருவரையும் இரகசியப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்த வியாபாரிகளிடமிருந்து வெளிநாட்டில் அச்சடிக்கப்பட்ட 60 லட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர் மற்றும் யூரோ கள்ள நோட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## புலிகளுக்கு பொருட்கள் அனுப்பியவரை அயர்லாந்திலிருந்து நாடுகடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

வட அயர்லாந்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பெருந்தொகையான பொருட்களை அனுப்பியதாகத் தெரிவித்து சோமசுந்தரம் நாகராசா என்பவரை அந்த நாட்டிலிருந்து நாடுகடத்துவதற்கு பிரித்தானிய உள்நாட்டு நடவடிக்கைகள் அலுவலகம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தத் தீர்மானத்துக்கு எதிராக நீதியாளர்கள் மூலமாக - தான் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டால் இராணுவத்தினரால் கொல்லப்படுவாரென்றும், இதனால் தன்னை இலங்கைக்குத் திருப்பியனுப்பவேண்டாமென அவர் கோரியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்குப் பெருந்தொகையான பொருட்களை அனுப்பிவைத்தாரெனச் சொல்லப்படும் நாகராசா என்பவர் சில வருடங்களுக்கு முன்பு இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான நாகராசாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வட அயர்லாந்தில் அரசியல் தஞ்சம் அளிக்கப்பட்டது. (தே)

# அருமை கல்விக்கூட ஆண்டுவிழாவில் தேசியத் தலைவர் கலந்துகொண்டார்!

அருமை கல்விக்கூட போராளிகளின் அறிவியல் கண்காட்சி மற்றும் ஆண்டுநிறைவு நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தேசியத்தலைவர் - அதிசிறப்பாய், சிறப்பாய் கற்கை நிறைவு செய்த போராளிகளுக்கும், இந்தப் போராளிகளுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.

அததுடன், இந்த நிகழ்வில் அருமை கல்விக்கூடப் போராளிகளினால் முதல் பயணம், எங்கள் மனக்கண்களைத் திறவுங்களேன், அரசியற் புலனாய்வுக்கருத்துக்கள் ஆகிய மூன்று நூல்களும் வெளியிட்டு வைகக்கப்பட்டன. அருமை கல்விக்கூடப் பொறுப்பாளர் நாவலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதற்பயணம் மற்றும் அரசியற் புலனாய்வுக் கருத்துக்கள் ஆகிய நூல்களை நாவலன் வழங்க தமிழீழத் தேசியத் தலைவர் பெற்றுக்கொண்டார்.

போராளி ஆதித்தநிலா எழுதிய எங்கள் மனக்கண்களைத் திறவுங்களேன் என்ற நூலை போராளி ஆனந்தி வழங்க, தமிழீழத் தேசியத தலைவர் பெற்றுக்கொண்டார். மூத்த தளபதி ச.பொட்டுவின் கருத்துரையை அடுத்து கலைநிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, மூத்த தளபதி கேணல் பால்ராஜ் மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் கலந்துகொண்டனர்.

# சமூகசேவைப் பணிகள் டிப்ளோமா கற்கைநெறி

(கொழும்பு)

தேசிய ஊடக அபிவிருத்தி நிறுவனம், சமூக சேவைப்பாடுகள் தொடர்பான ஈராண்டு டிப்ளோமா பாடநெறி ஒன்றை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடத்துவதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து, குறித்த ஆண்டில் பல்கலைக்கழக பிரவேசத்துக்காக விண்ணபபிப்பதற்குரிய அடிப்படைத் தகுதிகளைப பூர்த்தி செய்தவர்களும அல்லது -

கல்வித் தகைமைகளுக்கு மேலாக வேறு உயர் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களும், சமூகநல நோம்புகனத்தில் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம் உள்ளவர்கள் அல்லது, மூன்று வருட சேவையைப் பூர்த்திசெய்த ஆசிரியர்கள், மீன்பிடி அலுவலர்கள், காணித் திணைக்கள குடியேறறத்திட்ட அதிகாரிகள், ச.காதார பரிசோதகர்கள், தாதிகள், சனசமூக அபிவிருத்தி அதிகாரி, கிராம அபிவிருத்தி அதிகாரி, கிராம அபிவிருத்தி உதவி அதிகாரி, கிராம அலுவலர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரிகள் ஆகியோர் இந்தப் பாடநெறிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

இந்தப் பாடநெறிக்கான மேலதிக விபரங்கள், மாதிரி விண்ணப்பப்படிவம் ஆகியன கடந்த மாதம் 30 திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (21)

# திருமலையில் புலிகளின் பிரதேசத்தில் நவீன தொலைத் தொடர்பு கருவிகள்!

## பொலிஸ் தரப்பு குற்றச்சாட்டு

திருகோணமலை மாவட்டம் மூதூர் பொலிஸ் நிலைய எல்லைக்குள் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் விடுதலைப் புலிகளால் செய்மதித் தொலைபேசிகள் மற்றும் நுண் அலையுணர் கருவிகளான ராடர்கள் பொருத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சூடாகுடன் மற்றும் கிச்சிலியன் ஆகிய இடங்களிலேயே இவை நிறுவப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினரின் கடற்கலங்களின் நடமாட்டங்களை கண்காணிக்கவும், கிழக்குத் தகவல்களை வன்னியிலுள்ள தலைமைப்பீடத்திற்கு உடனடியாக வழங்கவும் இவை பயன்படுத்தப்படுவதாக பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. திருகோணமலை மாவட்ட கடற்புலிகளின் தளபதி அமுதத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இந்தத் தொலையுணாதிறன் கருவிகள் கையாளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# பற்றைக்குள்ளிருந்து யுவதியின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா சமளங்குளம் பகுதியில் யுவதி ஒருவரின் சடலம் கடந்த சனியன்று காலை மீட்கப்பட்டது.

சமளங்குளத்தைச் சேர்ந்த இந்திரகௌரி (வயது 30) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை முதல் இவர் காணாமற்போயிருந்ததாகவும், இவரை எங்குதேடியும் கிடைக்கவில்லையெனவும், இந்த நிலையில் கடந்த சனியன்று காலை சமளங்குளம் மூன்றுமுறிப்பு வீதியிலுள்ள சிறிய பற்றைக்காட்டுப்குதியில் இவரது சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட சடலம், பிரேதப் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு பிரேத பரிசோதனை நடத்தப்பட்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (03)

### வெளிநாட்டுத் தூதரகங்கள்

# சந்தேகத்துக்கிடமான கடிதங்களையோ பொதிகளையோ பொறுப்பேற்காதாம்!

இலங்கையில் அமைந்துள்ள வெளிநாடுகளின் தூதுவராலயங்களுக்கு வரும் சந்தேகத்துக்குரிய எந்தவொரு கடிதத்தையோ, பொதியையோ பொறுப்பேற்றுக்கொள்வதில்லை என அறிவித்துள்ளன.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதுவராலயத்திற்குக் கடந்த 10 ஆம் திகதி வந்த தூளடங்கிய கடிதமொன்றை அடுத்து அந்த அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

இதனை அடிப்படையாக வைத்தே அனைத்துத் தூதுவராலயங்களும் இந்த முடிவை எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.




# மாட்டினா நவரத்திலோவா ஒலிம்பிக்கில் புதிய சாதனை



ஒலிம்பிக்கில் வயதான வீராங்கனை என்ற புதிய சாதனையை நிகழ்த்தினார் அமெரிக்காவின் மாட்டினா நவரத்திலோவா.

ஒலிம்பிக்கில் ஒவ்வொருவரும் எத்தனையோ சாதனைகள் செய்து வருகின்றனர். பல எண்ணிப் பார்க்க முடியாத சாதனைகளாகக் கூட இருக்கும்.

ஆனால், ரெனிஸ் வீராங்கனை மாட்டினா நவரத்திலோவாவுக்கு சாதனை, வயது வடிவில் வந்திருக்கிறது. அமெரிக்காவைச் சேர்ந்த இவருக்கு தற்போது 47 வயதாகிறது. இந்த வயதில் ரெனிஸில் பங்கேற்ற முதல் வீராங்கனை என்ற சாதனையை இவர் படைத்துள்ளார்.

இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், இதுதான் இவர் பங்கேற்கும் முதல் ஒலிம்பிக். இதற்கு முன்னதாக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த நார்மன் ப்ரூக்ஸ் தனது 46 ஆவது வயதில் 1924 இல் பாரிஸில் நடந்த ஒலிம்பிக்கில் விளையாடியுள்ளார்.

அமெரிக்கா தரப்பில் பிளான்கே ஹிலியார்ட் தனது 44 வயதில் 1908 இல் லண்டனில் நடந்த ஒலிம்பிக் தொடரில் பங்கேற்றுள்ளார்.



100 மீற்றர் பட்டபிளை நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற அவுஸ்ரேலியாவின் பெட்ரியா தோமஸ்.




ஸ்நாட்ச் முறையில் தனது எடைக்கு மேலாக ஒரு மடங்கு எடையைத் தூக்கி உலக சாதனை படைத்து தங்கப் பதக்கத்தை வென்ற துருக்கி வீராங்கனை நுர்கான் தேலான்.



400 மீற்றர் பிரீ ஸ்டைல் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற அவுஸ்ரேலியாவின் இயாண் தோர்ப், வெள்ளிப் பதக்கம் வென்ற அவுஸ்ரேலியாவின் கிராண்ட் ஹேகட், வெண்கலப் பதக்கம்பெற்ற அமெரிக்காவின் க்லீட் கெல்லர்.



10 மீற்றர் ஏர் ரைபிள் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கம் வென்ற உக்ரேனின் ஒலினா காஸ்டிவிச்.



4X100 மீற்றர் பிரீ ஸ்டைல் தொடர் நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற அவுஸ்ரேலிய பெண்கள் அணி.




10 மீற்றர் ஏர் ரைபிள் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கம் வென்ற உக்ரேனின் ஒலினா காஸ்டிவிச், வெள்ளி வென்ற சேர்பியாவின் ஜாஸ்னா செக்காரியாக் மற்றும் வெண்கலம் வென்ற பல்கேரியாவின் மரியா கிராஸ்தெவா.



பெண்களுக்கான 3 மீற்றர் ஒருங்கிணைந்த ஸ்பிரிங் போர்ட் டைவிங் போட்டியில் தங்கம் வென்ற சீன மங்கையரும், வெள்ளி வென்ற ரஷ்ய மங்கையரும், வெண்கலம் வென்ற அவுஸ்ரேலிய மங்கையரும்.



டபிள் ட்ரப் துப்பாக்கிசுடும் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வீரர் அகமட் அல்மக்ரோம்.




பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்ற அவுஸ்ரேலியாவின் சாரா காரிகான்.



துப்பாக்கி சுடுதலில் டிராப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற மகிழ்ச்சியில் ரஷ்யாவின் அலெக்ஸி அலிபாவ்.



200 மீற்றர் பிரீஸ்ரைல் நீச்சலில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலியாவின் இயன்தோர்ப்புடன், நெதர்லாந்தின் பீற்றர் வான்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவுசெய்த கிரிக்கெட் கழகங்களிடையே 50 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

ஜே.டி.சி.ஏ கிண்ணத்துக்காக நடாத்தப்படவுள்ள இந்தக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை, இந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன் 'சுற்றுப்போட்டி செயலாளர், 29 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (58)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் -

இன்று பி.ப 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பொமர்ஸ் விளையாட்டுக்கழத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும்,

பிற்பகல் 4.30 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கழுகு விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (58)

## டெஸ்ட் போட்டியில்

# பத்தாயிரம் ஓட்டங்களை கடந்தார் பிரைன் லாரா!



மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணித் தலைவர் பிரைன்லாரா தனது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தார்.

இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் போட்டித் தொடரிலேயே லாரா இந்த ஓட்ட எண்ணிக்கையைக் கடந்தார்.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி தற்போது ஓல்ட்ரபூட் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் லாரா பத்தாயிரம் ஓட்டங்களைக் கடக்க ஏழு ஓட்டங்களே தேவையாக இருந்தது. ஆனால், முதல் இனிங்ஸில் அவர் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

இரண்டாவது இனிங்ஸில் ஏழு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த ஏழு ஓட்டங்கள் மூலம் அவர் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தார்.

இதன் மூலம், லாரா 111 டெஸ்ட் தொடரில் விளையாடி பத்தாயிரம் ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதில் 20 சதமும் 45 அரைச் சதமும் அடங்கும். அத்துடன் பத்தாயிரம் ஓட்டங்களைக் குறைந்த போட்டிகளில் பெற்றவர் என்ற சாதனையையும் லாரா பெற்றுள்ளார்.

அத்துடன், பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்களில் இவர் நான்காவது வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே கவாஸ்கர் (இந்தியா), அலன்போடர், ஸ்ரீவோ (அவுஸ்ரேலியா) ஆகியோர் இந்த ஓட்ட எண்ணிக்கைகயைக் கடந்தவர்களாவர்.

கடந்த ஏப்ரல் மாதம் இங்கிலாந்துக்கெதிராக மேற்கிந்தியாவில் நடந்த டெஸ்ட் போட்டியில் லாரா 400 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்ததும் குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் உதைபந்தாட்டம்; காலிறுதிக்கு ஈராக் தகுதி!



ஒலிம்பிக் உதைபந்தாட்டப் போட்டியில் ஈராக் அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. ஜப்பான் அணி 2:3 என்ற கோல் கணக்கில் இத்தாலியிடம் தோல்வியடைந்து வெளியேறியது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் உதைபந்தாட்டப் போட்டிகள் கிரீஸின் வோலாஸ் நகரில் நடந்துவருகின்றன. நேற்றுமுன்தினம் நடந்த தகுதி லீக் சுற்றுப் போட்டியில் - ஈராக், கோஸ்டாரிகா அணிகள் மோதின. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் ஏதும் அடிக்காத நிலையில் சமநிலையில் இருந்தன.

பின்னர் ஆட்டத்தின் 67 ஆவது நிமிடத்தில் ஈராக் அணியின் ஹவார் முல்லா முகமது, கோல் அடித்து அணிக்கு முன்னிலை பெற்றுத் தந்தார். இதைத் தொடர்ந்து அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் மஹதி கரீம் இரண்டாவது கோல் அடிக்க, ஈராக் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதன்மூலம் இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற ஈராக் அணி 6 புள்ளிகளுடன் காலிறுதிக்குத் தகுதிபெற்றது.

இந்த அணி முதல் லீக் சுற்றில் 4:2 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் அணியை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. அடுத்து மூன்றாவது லீக் சுற்றில் மொராக்கோவை எதிர்த்து விளையாடவுள்ளது.

இந்த வெற்றிகுறித்து முல்லா முகமது கூறுகையில் -

எங்கள் நாட்டில் நடந்துவரும் போர் காரணமாக உரிய பயிற்சி மேற்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் போட்டியில் நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டு காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளோம். இந்த வெற்றி, எங்கள் நாட்டு மக்களை மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்திருக்கும் என்றார்.

மற்றொரு போட்டியீல் இத்தாலி, ஜப்பான் அணிகள் மோதின. இதில் கடந்த முறை உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் அரையிறுதிவரை முன்னேறிய ஜப்பான் அணி 2:3 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

இத்தாலியின் அல்பர்டோ கிலார்டினோ இரண்டு கோல்கள் அடித்து அணியை வெற்றி பெறச் செய்தார். இந்தத் தோல்வியின் மூலம் ஜப்பான் அணி தொடரிலிருந்து வெளியேறியது. முன்னதாக நடந்த முதல் லீக் சுற்றுப் போட்டியில் ஜப்பான், பராகுவே அணியிடம் 4:3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிரீசுக்கு முதல் பதக்கம்

பிரமாண்டமான முறையில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்திவரும் கிரீஸ், இந்தப் போட்டிகளில் முதலாவது தங்கப்பதக்கத்தை வென்றது.

மூன்று மீற்றர் பலகை மீறித் தாவி நீந்தும் போட்டியிலேயே கிரீஸ் நாட்டின் நிக்கொலஸ் சிறநிடில், தொமஸ் பிமின் ஜோடி முதலாவது தங்கத்தை வென்றது.

ஜேர்மன் இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றது.

# விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்

## தரம் – 11

ஆசிரியர் – ம.கஜன்

**பின்வரும் வினாக்களின் சரியான விடையின் இலக்கத்தைத் தெரிவு செய்து அடைப்பினுள் இடுக.**

1. பின்வருவனவற்றுள் உயிர்ப்பான உள்ளெடுத்தல் செய்முறை எது?
   1) பிரசாரணம் 2) பரவல் 3) கனியுப்பு உள்ளெடுத்தல்
   4) வேர்மயிர்களினால் நீர் உறிஞ்சல்
2. இயற்கையான ஒரு பங்கு புகவிடும் மென்சவ்வு
   1) ஆட்டின் சிறுநீர்ப்பை 2) தாவரக்கலச்சுவர்
   3) செலோபேன்தாள் 4) பொலித்தீன்தாள்
3. அணுவில் ஏற்றமில்லாத துணிக்கை எது?
   1) இலத்திரன் 2) நியூத்திரன்
   3) புரோத்தன் 4) நியூக்கிளியோன்
4. சேர்வையில் கூறுகளைப் பிரிக்கும் முறையாக அமைவது.
   1) கரைத்தல் 2) வடிகட்டல்
   3) ஆவியாக்குதல் 4) மின்பகுத்தல்
5. கலத்தின் கருவிலிருக்கும் மிக முக்கிமானது.
   1) இழைமணிகள் 2) நிறமூர்த்தங்கள்
   3) கலச்சுவர் 4) முதலுரு
6. தணற்குச்சியை தீப்பற்றி எரியச் செய்யும் வாயு
   1) ஐதரசன் 2) காபனீரொட்சைட் 3) நைதரசன் 4) ஒட்சிசன்
7. எக்காரணி அதிகரிக்கும்போது ஆவியுயிர்ப்பு வீதம் குறைவடையும்
   1) வேகமாக வீசும் காற்று 2) நிலநீரின் அளவு
   3) சூழல் வெப்பநிலை 4) வளியின் ஈரப்பதன்
8. $X_{19}^{39}$ என்னும் மூலகத்தின் அணுவெண்
   1) 19 2) 20 3) 39 4) 40
9. தூய பதார்த்தத்தின் இயல்பு அல்லாதது.
   1) கொதிநிலை மாறாது 2) உருகுநிலை மாறாது
   3) ஏகவினமானது 4) பலவினமானது
10. வேர்ப்பகுதியில் உணவு சேமிப்பது
    1) முள்ளங்கி 2) கீரை 3) வாழை
    4) உருளைக்கிழங்கு
11. வாழைமரத்தின் போலித்தண்டை வெட்டும்போது நீர் வேகமாகக் கசியக் காணப்படுகிறது காரணம்.
    1) ஆவியுயிர்ப்பு ஈர்ப்புவிசை 2) தண்டின் பருமன்
    3) வேர் அமுக்கம் 4) மயிர்த்துளைக் கவர்ச்சி விசை
12. கல்சியத்தின் அணுவெண் 20 எனின் அதன் இலத்திரன் நிலையமைப்பு
    1) 2,8,10 2) 2,8,8,10 3) 2,18
    4) 2,8,8,2
13. எத்தாவரத்தின் இலைகளில் இலைவாய்கள் குழிகளில் அமைந்துள்ளன.
    1) எருக்கலை 2) சவுக்கு 3) சதுரக்கள்ளி
    4) அலரி
14. பொருள் ஒன்றின் புவியீர்ப்பினாலான ஆர்முடுகல் $10ms^{-2}$ எனின்
    1) அதன் வேகம் ஒவ்வொரு செக்கனுக்கும் $10ms^{-1}$ ஆல் அதிகரிக்கும்
    2) அதன் ஆர்முடுகல் ஒவ்வொரு செக்கனுக்கும் $10ms^{-1}$ இனால் அதிகரிக்கும்
    3) அதன் வேகம் ஒவ்வொரு செக்கனுக்கும் $10ms^{-2}$ இனால் அதிகரிக்கும்
    4) அதன் ஆர்முடுகல் ஒவ்வொரு செக்கனுக்கும் $10ms^{-2}$ இனால் அதிகரிக்கும்
15. பொருள் ஒன்றை வெப்பமாக்கும் போது அப்பொருள் பெறும் வெப்பத்தின் அளவு தங்கியிருப்பது
    1) திணிவு 2) தன்வெப்பக்கொள்ளளவு
    3) வெப்பநிலை வித்தியாசம் 4) மேற்கூறிய எல்லாம்
16. வெப்பமாக்கும் மின்சூள் ஒன்றில் வலு 2kw எனின் இது 30 செக்கனுக்கு தொழிற்பட்டால் பிறப்பிக்கப்படும் வெப்பசக்தி
    1) 6JKJ 2) 6000J 3) 60KJ 4) 40 600J
17. சோடியமிருகாபனேற்றின் சூத்திரம்
    1) $Na_2Co_3$ 2) $NaHCO_3$ 3) $NaCO_3$ 4) $Na_2HCO_3$
18. தாக்குதிறன் மிகவும் குறைந்த சடத்துவத் தன்மையைக் காட்டும் அணுவின் இலத்திரன் நிலையமைப்பு
    1) 2,8,7 2) 2,8 3) 2,8,1 4) 2,8,7
19. இதயத்தில் அமுக்கம் கூடிய குருதியை உடைய அறை எது
    1) இடது சோணையறை 2) வலது இதயவறை
    3) இடது இதயவறை 4) வலது சோணையறை
20. தரையில் இருந்து நிலைக்குத்தாக மேலே எறியப்பட்ட பொருளின் வேகநேர வரைபு




**பகுதி ii**

1. அ) 1) $C_6H_{12}O_6$ 2) $NH_4CL$ 3) $CaCO_3$
   என்பவற்றின் இரசாயனப் பெயரையும் சாதாரண பெயரையும் எழுதுக.
2) பின்வரும் சேர்வைகளின் இரசாயனச்சூத்திரங்களை எழுதுக?
   1) மெதேன் 2) மகனீசியம் குளோரைட்
   3) பொற்றாசியம் பரமங்கனேற் 4) செப்புசல்பேற்

ஆ) நீரேற்றப்பட்ட செப்புசல்பேற்றை வெப்பமாக்கல்
2) மகனீசிய நாடாவை வளியில் எரித்தல் என்பவற்றின் அவதானங்களை எழுதுக?

| I | | | | | | | VIII |
|---|---|---|---|---|---|---|---|
| H | II | III | IV | V | VI | VII | |
| | Be | | N | | F | | |
| K | | | Si | | | | Ar |

தரப்பட்ட ஆவர்த்தன அட்டவணையை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக
1) வெற்றுக்கூட்டில் வரவேண்டிய மூலகங்களின் குறியீட்டை எழுதுக?
2) விழுமிய வாயுக்கள் எவை?
3) பங்கீட்டு வலுப்பிணைப்பில் ஈடுபடும் மூலகம் எது?
4) பங்கீட்டு வலுப்பிணைப்புச் சூத்திரம் ஒன்றை எழுதுக?
5) Si இன் இலத்திரன் நிலையமைப்பை எழுதுக?
6) மின்வலுப்பிணைப்பினால் உண்டாகும் சேர்வை ஒன்றை எழுதுக?
7) மின்வலுப்பிணைப்புக்கும் பங்கீட்டுவலுப்பிணைப்புக்கும் இடையிலான வேறுபாடு ஒன்று தருக?

3.




1) ஆவியுயிர்ப்பு என்பதை விளக்குக?
2) புயன் A யில் எண்ணெய்ப்படலம் விடப்பட்டதன் நோக்கம் யாது?
3) குறுகிய நேரத்தில் குறிப்பிட்ட மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் யாது செய்வீர்?
4) உபகரணம் ஒழுங்கு செய்யப்பட்டு 4 மணித்தியாலத்தில் என்ன மாற்றத்தை அவதானிக்கலாம்.
5) ஆவியுயிர்ப்பு வீதத்தை பாதிக்கும் 3 காரணிகளைக் குறிப்பிடுக?
6) ஆவியுயிர்ப்பை கட்டுப்படுத்த தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கங்கள் 4ஐ உதாரணத்துடன் தருக?

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2005

✹ இல. 01 முதல் 10 வரை சரியான விடையை எழுதுக.

01.




பின்னங்களை எழுதிக் கூட்டுக. ............+............=............

02.



மேலே தரப்பட்டது 0.5 இற்கு சமனாகுமா? ஆம்/இல்லை.......

03.



தரப்பட்ட மாபிள்களைச் சதுர எண்ணாக அமைக்குக.
..............................................

04. 3 cm இடைவெளியில் எட்டுப் போத்தல்கள் வட்டமாயும், நேர்கோடாயும் அடுக்கப்பட்டு உள்ளன. எது கூடுதலான நீளத்தைக் காட்டும்.
(1)



..............................

05. ஆமையும் முயலும் ஓட்டப்போட்டியில், இரண்டும் ஒரே நேரத்தில் எல்லையை அடைந்தன. எது கூடிய தூரம் ஓடியது?
..............................................

06. இலங்கையின் நாணயக்குற்றிகளில் ஒன்றில், இலங்கையின் ஆண்டுவிழா ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது எத்தனையாவது ஆண்டு விழா?
..............................................

07. வித்தியாசமான ஓர் அம்சத்தைக் கொண்ட கோள் எது?
..............................................

08. புவிக்கு எத்தனை துணைக்கோள்கள் உண்டு?
..............................................

09. இந்தியாவின் தேசிய மலர் எது?
..............................................

10. உடலிலும், கடலிலும் இருப்பது யாது?
..............................................

✹ இல. 11 முதல் 15 வரை சரியான விடையின் இலக்கத்தை எழுதுக.

11. மிகவும் இசைவாக்கம் பெற்ற பாலூட்டி எது?



1 2 3 4

12. மோப்பசக்தி கூடிய விலங்கு யாது?



1 2 3 4

13. எதிரொலிமூலம் இயங்கும் விலங்கு யாது?



1 2 3 4

14. முக்கனி அல்லாதது எது?



1 2 3 4

15. இலங்கையின் தேசியக்கொடியில் காணப்படுவது?



1 2 3 4

✹ இல. 16 முதல் 20 வரையான கூற்றுக்குப் பொருத்தமானதை தெரிவுசெய்து இலக்கத்தை எழுதுக.

16.



1 2 3 4 5

1. ஆயிரம் முட்டையிடுவதாகக் கூறப்படுவது.
2. நீண்டகாலம் வாழும்.
3. வன்கூடு கொண்டது.
4. மெல்லமெல்ல ஊரும்.

17.



1 2 3 4 5

1. பாட்டுக் கேட்கலாம்.
2. பொழுதுபோக்குச் சாதனம்.
3. படம் பார்க்கலாம்.

18.



1 2 3 4 5

1. பல்லுக்குத்த உறுதியானது
2. தாங்கும் வேர் கொண்டது.
3. சிறிய விதை கொண்டது.

19.



1 2 3 4 5

1. பறவைகளின் அரசன்
2. உயரப் பறக்கும்
3. நீண்ட தூரம் பறக்கும்

❋ இல. 21 முதல் 25 வரை சரியான ஒழுங்கில் இலக்கத்தை எழுதுக.

21.

1 2 3 4 5

22.

1 2 3 4 5

23.

1 2 3 4 5

24.

1 2 3 4 5

25.

1 2 3 4 5

❋ இல. 26 முதல் 30 வரை சரியான விடையின் இலக்கத்தை எழுதுக

26. கீழே தரப்பட்ட உபகரணங்களுள் வளியமுக்கத்தை அளக்கப் பயன்படுவது யாது?

1 2 3 4

27. தரப்பட்ட குறியீடுகளில் கருமுகில் பரந்த வானத்தை குறிப்பது யாது?

1 2 3 4

28. பாலைவனக் கப்பல் எனப்படுவது?

1 2 3 4

29. பூர்வபக்கப் பிறை யாது?

1 2 3 4

30. "இருந்தாலும், இறந்தாலும் ஆயிரம் பொன்" எனப்படுவது எது?

1 2 3 4

❋ இல. 30 முதல் 40 வரை வினாவப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

31. சரியான சுற்று காட்டும் படம் எது?


32.. செயற்கை மூளை எது?


33. செவ்வக எண் யாது?

| | | | |
|---|---|---|---|
| 4 | 6 | 9 | 16 |

❋ இல. 34 முதல் 40 வரை சரியான விடையை இடைவெளியில் எழுதுக.

34. உலகில் மிகப் பெரிய உயிரினம் யாது?
.........................................................

35. நிலத்தில் வாழும் மிகப்பெரிய முலையூட்டி யாது?
.........................................................

36. 
A B C எதில் நீர் கூடிய தூரம் பாயும்?
.....................................

37. சுவட்டு நிகழ்ச்சி, மைதான நிகழ்ச்சி என்பன கலந்த நிகழ்ச்சி யாது?.............................................

38. உஷ்ணப் பிரதேசங்களுக்கு ஏன் வெள்ளை ஆடை சிறந்தது?.................................................................

39.  எது எத்தனையாம் வகை நெம்புகோல்?
.....................................

40.  இது என்ன நடையைக் குறிக்கும்?
.....................................

❋ பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

காடும் வயலும் இந்நாளில்
கண்டபடிக்கு அழிவுடன்
கூடும் குப்பை கூழங்களால்
குடிநீர் கெட்டும் வருகிறதாம்.

நல்ல காற்றை நமக்காக
நாளும் தருகிற நல் மரங்கள்
இல்லையென்று ஆவதனால்
எங்கும் பசுமை அழிகிறதாம்.

(01)
(i) வயல் என்பதற்கு ஒத்தசொல் இரண்டு தருக
(ii) குடிநீர் எதனால் கெடுகின்றது? .................
(iii) நல்ல காற்றை நமக்குத் தருவது எது?
(iv) காடு என்பதற்கு எதிர்ச்சொல் தருக?
(v) 1 ஆவது பாடலிலுள்ள இணைமொழி எது?
(vi) 2 ஆவது பாடலிலுள்ள பெயரெச்சம் ஒன்று தருக.
(vii) "எங்கும் பசுமை அழிகிறது இவ் வாக்கியத்தின் எழுவாய் எது?
(viii) "வருகிறது" என்பதன் இறந்த கால வடிவம் யாது?
(ix) "மரங்கள்" என்பதன் ஒருமைச்சொல் யாது?
(x) "காடும் வயலும்" என்பதைப் பிரித்து எழுதுக.

இங்கே மடிக்கவும்



02. பின்வரும் விலைப்பட்டியலை கவனமாக வாசித்து அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

| அளவு | பொருள் | விலை ரூபா - சதம் |
|---|---|---|
| 1. 200g | பருப்பு | 16.00 |
| 2. 4kg | அரிசி | 132.00 |
| 3. 750 ml | தேங்காய் எண்ணெய் | 60.00 |
| 4. 3 kg | கடலை | 120.00 |
| 5. 5 | மின்கலம் | 90.00 |

i. 1kg பருப்பின் விலை யாது?......ரூபா........ சதம்
ii. 1kg அரிசியின் விலை யாது?.... ரூபா...... சதம்
iii. 1l தேங்காய் எண்ணெயின் விலை யாது?......... ரூபா.............. சதம்
vi. 1kg கடலையின் விலை யாது?..........ரூபா..... சதம்
v. ஒரு மின்கலத்தின் விலை யாது?....... ரூபா.......சதம்
vi. 500g பருப்பினதும் 1kg அரிசியினதும் விலை யாது?...... ரூபா............சதம்.
vii. 1l தேங்காய் எண்ணெயினதும் 500g கடலையினதும் விலை யாது?..............ரூபா.........சதம்.
viii. 750g கடலையினதும் 2 மின்கலத்தினதும் விலை யாது?...... ரூபா...............சதம்.
ix. 500g பருப்பும் 1kg அரிசியும் வாங்கிய மீரா ரூபா 100 ஐக் கடைக்காரனிடம் கொடுத்தால் அவருக்கு கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?..... ரூபா......சதம்.
x. 1/2l தேங்காய் எண்ணெயும் 500g கடலையும் வாங்க எண்ணிய அர்ச்சுனிடம் ரூபா 50.00 உள்ளது. அவருக்கு இன்னும் எவ்வளவு பணம் தேவை?....... ரூபா.........சதம்.

❋ பின்வருவன சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக.
1. புகைப்பிடிப்பதால் புற்று நோய் ஏற்படலாம். (....)
2. பழுத்த பழங்களில் விற்றமின் A உள்ளது. (....)
3. மழை வரப்போகிறது என்பதை சில பறவைகளின் அறிகுறி கொடுக்கும். (....)
4. நட்சத்திரங்கள் பகல் வேளையில் வானத்தில் இருப்பதில்லை. (....)
5. சில தாவரங்கள் வேரில் உணவைச் சேமித்து வைக்கின்றன (....)
6. நீரைச் சுத்திகரிக்க குளோரின் பயன்படுத்தப்படுகிறது. (....)
7. இலங்கையில் மொத்தமாக ஏழு மாகாணங்கள் உள்ளன. (....)
8. பொருட்களின் அதிர்வினால் ஒலி உண்டாகிறது. (....)
9. அடிப்படை நிறங்களில் பச்சையும் ஒன்று. (....)
10. இதனைப் படி இரேகை என்று கூறுவர். (....)

❋ பின்வரும் விளம்பரத்தைக் கவனமாக வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| பிள்ளையார் பப்படம் சுத்தமானது, தரமானது, சுவை நிறைந்தது, தூய்மையான பொருட்களால் செய்யப்பட்டது | | | |
| ஒருபைக்கற்றில் உள்ள அளவு 50 | உற்பத்தி திகதி 2004-05-25 | முடிவடையும் திகதி 2005-05-24 | சில்லறை விலை ரூபா 20-50 |
| பதிவு இல பப/யா/3978/c | விற்பனை:- மயூரன் பப்பட தொழிற்சாலை 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 3264 | | |

i. பப்பட உற்பத்தியில் பதிவு இலக்கம் யாது?
.........................................................
ii. பப்பட உற்பத்தி செய்யப்பட்ட திகதி யாது?
.........................................................
iii. பப்படப் பைக்கற் ஒன்றின் சில்லறை விலை யாது? ...................ரூபா....................சதம்.
iv. பப்படப் பைக்கற் ஒன்று பெறக் கூடிய இடத்தின் முகவரி யாது?.............................................
v. இந்த பப்படம் எந்த திகதியின் பின்னர் காலாவதியாகும்?...............................................
vi. இந்தப் பப்படத்தைப் பயன்படுத்தக்கூடிய காலப்பகுதி யாது?................................................
vii. ஒரு டசின் பப்படப் பைக்கற்றின் விலை யாது? ...................ரூபா....................சதம்.
viii. பப்பட விற்பனை நிலையத்துடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் யாது?..................
ix. தூய்மை என்பதற்கு எதிர்ச்சொல் யாது? ...........
x. ஒரு பைக்கற் பப்படத்தில் எத்தனை பப்படம் உள்ளது?...............................................

05 "அ" பகுதிக்குப் பொருத்தமானதை "ஆ" பகுதியில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை வெற்றுக் கூட்டினுள் எழுதுக.

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| i. தனது பாதுகாப்பிற்காக நிறம் மாறும் | ☐ | 1. ஈ |
| ii. இனிப்புள்ள இடங்களை நன்கு அறியும் | ☐ | 2. மின்மினிப்பூச்சி |
| iii. அசுத்தமான இடங்களில் காணலாம் | ☐ | 3. வௌவால் |
| iv. பறக்கும்போது ஒளியை உண்டாக்கும் | ☐ | 4. எறும்பு |
| v. இரவில் மட்டும் கண் தெரியும் | ☐ | 5. ஓணான் |

06 பின்வரும் தமிழ்ச்சொற்களை ஆங்கில மொழியில் எழுதுக.
i. தபாற்காரன்..........................................
ii. ஒன்பது..........................................
iii. இலக்கம்..........................................
iv. மிருகம்..........................................
v. பறவை..........................................
vi. தோடம்பழம்..........................................

(தொடரும்...)

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

## வருடாந்த மஹோற்சவம்

(உடுவில்)

சங்குவேலி ஸ்ரீசிவஞான விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை பகல் 11 மணிக்கு இரதோற்சவமும், ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (101)

(உடுவில்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்னவிநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

28 ஆம் திகதி சனிக்கிழமை தேர்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (101)

## ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம்

பன்னாலை வர்த்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் ஆயிரத்தெட்டு சங்காபிஷேக விழாவும் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (72)

## தீவுப் பகுதிகளில் பஸ் தரிப்பிடமின்றி மக்கள் அவதி

தீவுப்பகுதிக்கான போக்குவரத்து மார்க்கங்களில் பேரூந்துத் தரிப்பிடம் இன்றி பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக மண்கும்பான், வேலணைத்துறை சுருவில், புளியங்கூடல் போன்ற பகுதிகளில் பஸ்தரிப்பிடம் இன்மையால், பயணிகள் வெயிலில் பஸ்ஸிற்காக காத்திருப்பதைக் காணமுடிகின்றது.

மேலும், மழைக்காலம் ஆரம்பித்தால் பஸ் தரிப்பிடம் இன்றி இன்னும் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வரும் என பொதுமக்கள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (99)

## நெடுந்தீவு பணிமனைக்கு 2 கணினிகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைப் பாவனைக்கென இரு கணினிகள் யாழ்.மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டு, கடந்த வாரம் எடுத்து வரப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை இதற்கான கணினி அறை அமைக்கப்படாமையால், கணினிகள் இயக்க முடியாதநிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், கணினி அறை அமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (113)

# சிறுவர் நூல்களுக்கு எழுத்தாளர்களிடமிருந்து கையெழுத்துப் பிரதிகள் கோரப்பட்டுள்ளன

சிறுவர்களுக்கான புத்தகங்களை அச்சிட்டு வெளியிடும் எழுத்தாளர்களுக்கு உதவி வழங்கும் செயற்திட்டத்தின் கீழ், கல்வி அமைச்சின் இலங்கை தேசிய நூல் அபிவிருத்தி சபையினால், எழுத்தாளர்களிடமிருந்து கையெழுத்துப் பிரதிகள் கோரப்பட்டுள்ளன.

இந்த முறை தெரிவு செய்யப்படவுள்ள ஆக்க கர்த்தாக்களிடமிருந்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

எழுத்தாளர்கள் தமது கையெழுத்துப் பிரதிகளை செம்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக ஏ.பி. எல்.சுதர்மா, த.சில்வா, செயலாளர், இலங்கைத் தேசியநூல் அபிவிருத்திச்சங்கம், கல்வியமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 01-2784839 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரியவருகிறது. (31)

## நல்லூர் உற்சவம் இணையத்தளத்தில்

உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழும் சொந்தங்களுக்காக, நல்லூர் ஆலய உற்சவத்தையும், நல்லூர் ஆலயச் சூழலில் இருந்து, உலகத் தமிழர் வானொலியானது நேரடி அஞ்சல் செய்வதற்கும், இணையத்தளத்தினூடாக வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு வசதியாக, தற்காலிக கலையகம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகிறது. (31)

## - கல்வியியல் கல்லூரியிலிருந்து - இடைநிறுத்தப்பட்ட மாணவனை மீளச் சேர்க்குமாறு உத்தரவு

### - மனித உரிமை ஆணைக்குழு பிறப்பித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியியல் கல்லூரியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மாணவனை மீண்டும் கல்வியைத் தொடர அனுமதிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம் யாழ்.கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதிக்கு உத்தரவிட்டுள்ளது.

யாழ்.கல்வியியல் கல்லூரியில் கற்றுவந்த மாணவனான எஸ்.ரவிராஜ் என்பவரை கடந்த ஆறுமாத காலமாக யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி இடைநிறுத்தியிருந்தார்.

இது குறித்து யாழ்.மனித உரிமை கள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்த அந்த மாணவன் தனது கல்வி உரிமைகள் பறிக்கப்பட்டதாக மனுச் செய்திருந்தார்.

இது குறித்து கடந்த 10 ஆம் திகதி கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு - பாதிக்கப்பட்ட மாணவன், யாழ்.கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி, இலங்கைத் தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பணிப்பாளர் போன்றோர்களால் விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன.

இதன் பிரகாரம் பாதிக்கப்பட்ட மாணவனை உடன் தேசிய கல்வியியல் கல்லூரியில் கற்பதற்கு அனுமதிக்குமாறு கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து அந்த மாணவன் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரிக்கு செல்லவுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் தெரிவித்தார். (ப)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு உதவியாளர்களை நியமிக்குக

### - அமைச்சின் செயலாளருக்குக் கடிதம்

(சுதுமலை)

வடக்கு - கிழக்கிலுள்ள 20 பிரதேச சபைகளுக்கும் உள்ளூராட்சி உதவியாளர்களை நியமிக்கக்கோரி மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சர், அமைச்சின் செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் 72 சபைகள் இருந்த போதிலும், 52 சபைகளுக்கே உள்ளூராட்சி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 20 உள்ளூராட்சி சபைகளுக்கும் பட்டதாரிகளை நியமிக்குமாறு வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சர், அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் கடிதமூலம் கேட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற உள்ளூராட்சி உதவியாளர்கள், 5 வருடங்கள் பூர்த்தியான போதும் இன்னும் சேவைப் பிரமாணக் குறிப்பு, தரம், சேவை ஏனைய நலத்திட்டம் குறித்தும் எதுவித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் அந்தக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (91)

# மசூதியில் காணாமற்போன கூரைத்தகடுகள் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை

### - நீதிபதியிடம் முஸ்லிம் மக்கள் முறைப்பாடு

மானிப்பாய் வீதியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கூரைத்தகடுகள் காணாமல் போயுள்ளமை குறித்து, பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜாவிடம் யாழ்.முஸ்லிம் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாடு வடமாகாண பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்த முறைப்பாடு குறித்து யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜாவால் யாழ்.பொலிஸ் அத்தியட்சகர், யாழ்.பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துத் தெரியவருவதாவது - யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியின் ஐந்துசந்திப் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில், திருத்தப் பணிக்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கூரைத்தகடுகளில் சில இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

இது குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முஸ்லிம் மக்கள் முறைப்பாடு செய்தும், பொலிஸார் இதுவரை அவற்றை மீட்க முயற்சிக்கவில்லை. இதனையடுத்தே அந்த மக்கள் யாழ்.மாவட்ட நீதிபதிக்கும், வடபிராந்திய பொலிஸ்மா அதிபருக்கும் இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாரை இது குறித்து உடன் நடவடிக்கையெடுக்குமாறு யாழ்.மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார். (ப)

# கழிவு நீர் வாய்க்காலை திருத்தி உதவக் கோரிக்கை

பாசையூரில், ஜீ.ஜி.பொன்னம்பலம் குடியேற்றப் பகுதியிலுள்ள கழிவு நீர் வாய்க்கால் கடந்த பல மாதங்களாக திருத்தப்படாது உள்ளதனால், துர்நாற்றம் வீசுவதோடு, நுளம்புகளது பெருக்கத்தால் தாம் மிகுந்த துன்பங்களை அனுபவித்து வருவதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தமது இந்த அவலவாழ்க்கை தொடர்பாக, யாழ்.மாநகர சபைக்கு பாசையூர் மாதர் சங்கத்தினரும் மற்றும் பொதுமக்களும் பல தடவைகள் முறையிட்டிருந்தும் இதுவரை பலன் ஏதும் இல்லை என்றும், கடந்த சில மாதங்களுக்கு முன் யாழ்.மாவட்ட மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறையிட்டனர். இதையடுத்து, அங்கிருந்த ஒரு அதிகாரி குடியிருப்பை வந்து பார்வையிட்டுச் சென்று, ஒரு சில நாட்களில் மாநகர சபையில் இருந்து ஒரு உத்தியோகத்தர் வருகை தந்து, இந்தப் பகுதியை பார்வையிட்டுச் சென்றார்.

அதன் பின்னர் இன்றுவரை எது விதமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். இன்னும் ஓரிரு மாதங்களில் மழைக்காலம் ஆரம்பித்ததும், இந்தக்கழிவு நீர் வாய்க்காலைத் திருத்துவது சிரமமானதாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (31)

## இரவு நேர மின்வெட்டு வேலணையில் நீங்கியது

இலங்கை மின்சார சபையினால் வேலணைப் பிரதேசத்துக்கு வழங்கப்பட்டு வரும். பகுதிநேர மின்சாரத்தில் கடந்த சில மாதங்களாக அமுல்படுத்தப்பட்ட இரவு நேர மின்வெட்டு நீக்கப்பட்டுள்ளது. புதிதாக மற்றுமொரு மின்பிறப்பாக்கி இணைக்கப்பட்டதை அடுத்தே மின்வெட்டு நீக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி தினமும் காலை 5 மணி முதல் 6.30 வரையும், 10.30 முதல் 1 மணி வரையும், மாலை 6.30 முதல இரவு 11.30 வரையும் மின்சாரம் வழங்கப்படுகின்றது. இந்த மின்வெட்டு குறித்து ஈழநாடு செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (99)

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு குருநகரில் நாற்பது பரப்பு காணி!

யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்ப நிறுவனத்துக்கு குருநகர்ப் பகுதியில் காணி ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குனர் ரி.இராஜரட்ணம் தெரிவித்தார்.

நாற்பது பரப்பு கொண்ட இந்தக் காணி கண்டி வீதியில் இருந்து 1கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

தனியார் ஒருவரிடம் இருந்தே இந்தக் காணி நீண்டகால குத்தகைக்கு பெறப்பட்டுள்ளது.

காணிக்குள் ஏற்கனவே பழைய கட்டடங்கள் இருப்பதால், அவற்றைத் திருத்தி அமைத்து விரைவில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட ஏற்பாடு செய்து வருகின்றோம்.

இந்தக் காணி மேலதிக கட்டடங்கள் அமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு தொழில்நுட்ப நிறுவனம் பணிப்பாளர் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார். இங்கு அவர் "தேசிய வியாபார டிப்ளோமா" கற்கை நெறியை ஆரம்பித்து வைப்பதோடு, எமது நிறுனத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களையும் அன்பளிப்பாக வழங்க இருக்கிறார் எனத் தெரிவித்தார்.

இந்தக் காணியைப் பெறுவதற்கு உதவி புரிந்த தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை பொறுப்பாளர் இளங்குமரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், சிவனேசன். மாவை சேனாதிராஜா ஆகியோருக்கும், அரசாங்க அதிபர், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர், கச்சேரி நில அளவையாளர், யாழ். பிரதேச செயலர் மற்றும் தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம் ஆகியோருடன் காணி கொள்வனவுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் நிறுவனத்தின் சார்பில் நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் போது இந்திராணி பாஸ்கரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம். (12)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
இரண்டாவது அகவையில்



பெயர் : கி.பிரணவன்
முகவரி :35, சீனிவாசகம் வீதி, கொட்டடி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

# வன்னித் தேர்தல் தொகுதியில் வாக்காளர் பதிவு நடைபெறவுள்ளது

(கிளிநொச்சி)

வன்னி தேர்தல் தொகுதியின் வாக்காளர்களை 11 ஆண்டுகளின் பின்னர் பதியும் நடவடிக்கை நாளை முதல் ஆரம்பமாவிருப்பதாக, வவுனியா தேர்தல் அலுவலக தகவல்கள் தெரிவித்தன.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இறுதியாக 1992 ஆம் ஆண்டு பதிவு மேற்கொள்ளப்பட்டது. எனினும், முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா வடக்கு, மன்னார் மாவட்டத்தின் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியில் பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த 13ஆம் திகதி தேர்தல் ஆணையாளருக்கும், வடக்கு - கிழக்கு உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்போது வன்னி தேர்தல் தொகுதியில் புதிதாக பதிவுகள் மேற்கொள்வதன் ஊடாக 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்காளர்கள் அதிகரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பதிவுகளை மேற்கொளவதற்காக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு வவுனியா அரச செயலக அதிகாரிகள் நாளை செல்லவுள்ளனர்.

இவர்கள் அங்குள்ள அனைத்து கிராம சேவையாளர்களுக்கும் முன்னதாக விளக்கமளிக்கவுள்ளனர். இதன் பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இராணுவக் கட்டுபாடற்ற பகுதியான முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா வடக்கு பிரதேசம், மன்னார் மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு நேரடியாக அதிகாரிகள் சென்று இந்தப் பதிவுகளை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வன்னியில் தந்திர வித்தைகள் நிகழ்ச்சி

(கிளிநொச்சி)

நலிவுற்றோர் நலன்வாழ்வுத் திட்ட நிதிக்காக வன்னியில் பல பாடசாலைகளிலும் கோணேஸ் குழுவினரின் தந்திர வித்தை நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

நலிவுற்றோர் நலன்வாழ்வுத்திட்ட நிதிக்காக தந்திர வித்தை நிகழ்ச்சிகளை கலைஞர் கோணேஸ் தனது குழுவினருடன் கடந்த மாதம் முதல் வாரப்பகுதியிலிருந்து வன்னியில் பல பாடசாலைகளிலும் நடத்திவருகின்றார்.

இதில் பெருந்தொகையான மாணவர்களும், பெற்றோரும் கலந்துகொண்டு தமது பங்களிபபை நல்கி வருகின்றனர்.

இவருடன் இந்த நிகழ்ச்சியில் அவரது பிள்ளைகளான - வேணுகோபால், பிரசாந்தினி, இனியவள் ஆகியோருடன் அவரது நண்பர் வின்சன் ராஜ்ஜும் இணைந்து சமுதாய முன்னேற்றத்துக்காக பங்களிப்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன!

## வவுனியா மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

போர்க்காலத்தை விடவும் இன்று தான் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மிகவும் மோசமாக கட்டவிழ்த்து விடப்பட்டு இருக்கின்றது என வவுனியா மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் அலை தெரிவித்தார்.

கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வவுனியா பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் இறம்பைக்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பெண்கள் சங்கமம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் -

போர்க்காலத்தில் பெண்களுக்கு எதிராக சில நவடிக்கைகள் இருந்தனதான். எனினும் அப்போது இருந்ததை விட்வும் மோசமாக தற்போது நடைபெறும் செயல்கள் மிகவும் கேவலமாக உள்ளன.

பாலியல் ரீதியான பிரச்சினைகள், வருமானம் தொடர்பான பிரச்சினைகள், இதனால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைப் பார்த்தால் இந்தச் செயல்களுக்கு பின்னால் சில சக்திகள் பின்னின்று செயற்படுவது தெரிகிறது.

எனவேதான் இவ்வாறான சங்கம நிகழ்வுகள் மூலம் இன்று பெண்கள் எவ்வாறாக இந்தப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பது தொடர்பாக ஆராயவும் இதற்கு என்ன தீர்வு என்று ஆராயவும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பெண்கள் வெளியில் சொல்ல முடியாத பல விடயங்களை ஏனையோரிடம் பகிர்ந்து கொள்வதன் மூலம் தீர்வு காணமுடியும். அத்துடன், இவ்வாறான நிகழ்வுகள் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (03)

# வவுனியா மாவட்ட புதிய படைத்தளபதி முதலாம் திகதியன்று பதவியேற்பு!

(வவுனியா)

புதிய வவுனியா மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க எதிர்வரும் முதலாம் திகதி பதவி ஏற்கவுள்ளார்.

தற்போது பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய இராணுவத் தமையகத்திற்கு இடமாற்றம் பெற்று செல்வதையடுத்தே அவர் வவுனியா மாவட்ட இராணுவத் தளபதியாகப் பதவியேற்கவுள்ளார்.

இதேவேளை, வவுனியா போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவராக இருந்த யோகான் - தனது பதவிக்காலம் முடிவடைந்து நாடு திரும்பவுள்ளனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் ஒப்பந்த அடிப்படையிலேயே தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தூயவனின் 'யுத்தகாண்டம்' சனியன்று வெளியீட்டு விழா!

(கிளிநொச்சி)

தூயவன் எழுதிய 'யுத்தகாண்டம்' நூல் வெளியீட்டு விழா, எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி சுஜந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகம்வில் பொதுச்சுடரை பொன் தியாகம் ஏற்றிவைப்பார். தேசியக் கொடியை ரேகா ஏற்றிவைக்க, விழாச சுடரை மனோஜ் ஏற்றிவைப்பார்.

வைத்திய கலாநிதி கெங்காதரன் நூலை வெளியிட்டுவைக்க, புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

முதல் பிரதியை வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் பெற்றுக் கொள்வார்.

சிறப்புரையை க.வே.பாலகுமாரன் நிகழ்த்துவார். மதிப்பீட்டுரையை - வைத்திய கலாநிதி சிவபாலன், மு. திருநாவுக்கரசு ஆகியோர் நிகழ்த்துவர்.




## இரணைமடுக்குளம் புனரமைக்கப்படவுள்ளது

கிளிநொச்சி, நியாப் திட்டத்தின் கீழ் உலகவங்கியின் உதவியுடன் இரணைமடுக்குளம் 100 கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்தக் குளம் இலங்கையிலுள்ள பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் பதினொராவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும், இந்தக் குளம் 1987 ஆம் ஆண்டுக்குப் பின் இதுவரைகாலமும் அபிவிருத்தி செயயப்படவில்லை.

இந்தக் குளத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாமையால், மேலும் நிதி ஒதுக்கப்படவேண்டுமென கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் புவனேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கற்றாக் நோயாளர்களுக்கு இன்று புதுக்குடியிருப்பில் சத்திரசிகிச்சை!

கண்டாவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 30 கற்றாக் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை இன்று புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதன்படி சத்திரசிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு -

சி.குமாரசாமி (தர்மபுரம்), மூ.பெருமாள் (தர்மபுரம்), கி.இலட்சுமி (தர்மபுரம்), மு.திருமால் (கட்டைக்காடு), ந.செல்லம்மா (நெத்தலியாறு), சி.மருதப்பு (தர்மபுரம்), த.சின்னத்தம்பி (மயில்வாகனபுரம்), அ. நாகேந்திரன் (மயில்வாகனபுரம்), ஞா.சின்னம்மா (வெளிக்கண்டல்), ஆ.உத்தமி (உழவரூர்), சு.பிரதாப் (மயில்வாகனபுரம்), ஜெ.நிர்மலா (புன்னைநீராவி), ந. இலட்சுமி (தர்மபுரம்), வை.பரமேஸ்வரி (தர்மபுரம்), ஆ.வள்ளியம்மா (விசுவமடு), ஞா.விசித்திரா (உழவரூர்), ப.கிருஸ்ணமாகன் (பெரியகுளம்), மு.சரஸ்வதி (தர்மபுரம்), மு. கிருஸ்ணன் (வெளிக்கண்டல்), க. செல்வரட்ணம் (வெளிக்கண்டல்).

இவர்களுக்கான கண் பரிசோதனைகள் கடந்த 31 ஆம் திகதியன்று தர்மபுரம் வைத்தியசாலையில் டொக்டர் க.எழுமதியால் மேற்கொள்ளப்பட்டது.

சத்திரசிகிச்கைக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் தமக்கான சிகிச்சையைப் பெற புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு இன்று செல்லுமாறு, கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் அறிவித்துள்ளர்.

# முள்ளியவளை வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு!

புலிகளின் குரல் வானொலியின் முள்ளியவளைப் பிரதேச வானொலி மன்ற நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் புலிகளின் குரல் முள்ளியவளைப் பிரதேச வானொலி மன்றத்தினரின் நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு வானொலி மன்றத்தினரின் ஏற்பாட்டில் புலிகளின் குரலின் நடமாடும் ஒலிப்பதிவுக் கலைஞர்களால் மேற கொள்ளப்பட்டது.

நுண்கலைக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இந்த ஒலிப்பதிவில் - கல்லூரி மாணவர்களது நிகழ்ச்சிகளோடு அந்தப் பிரதேச கலைஞர்களது ஆக்கங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

புலிகளின் குரல் வானொலி மன்ற ஒலிப்பதிவுகளின் மூலம் அவ்வப் பிரதேச கலைஞர்களின் திறன்கள் இனங்கண்டு வளர்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# இலக்கிய விழா குறித்து விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இலக்கிய விழா தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு, அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் 8 ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ள இலக்கிய விழா தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தடுத்துவைத்திருந்த படகை யாழ்.நீதிமன்றம் விடுவித்தது!

(யாழ்ப்பாணம்)

வெடிமருந்து வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு கைதானோருடன் தடுத்துவைக்கப்பட்டிருந்த மீன்பிடிப்படகு நேற்றுமுன்தினம் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இந்த உத்தரவை நேற்றுமுன்தினம் விடுத்தார். வெடிபொருள் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட இந்தப் படகை விடுவிக்க வேண்டாமென முன்னர் பொலிஸார் கூறியதால், அது தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

எனினும், நேற்றுமுன்தினம் பொலிஸார் மீனவர் படகு விடுவிக்கப்படுவதை எதிர்க்காத காரணத்தால் படகு 50 ஆயிரம் ரூபா பிணை முறியில் விடுவிக்கப்பட்டது.

இந்தப் படகில் வெடிபொருள் வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படும் சந்தேகநபர்கள் கடந்த மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. ..(ப)

## பாவனைக்குதவாத தேயிலை கைப்பற்றப்பட்டது

யாழ்.நகரப்பகுதியில் பாவனைக்குதவாத 612 கிலோ தேயிலையை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வாரம் யாழ்.நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அதிரடி நடவடிக்கையின்மூலம் - யாழ். மாவட்ட பொது சுகாதார பரிசோதகர் எஸ். மகாதேவனினால் இந்த 612 கிலோ தேயிலை கைப்பற்றப்பட்டது.

இந்தத் தேயிலையை கொழும்பிலுள்ள இரசாயனப் பகுப்பாய்வு மையத்திற்கு அனுப்பி, பகுப்பாய்வு செய்து அவற்றில் இரசாயனப் பொருட்கள் கலந்திருக்கின்றனவா என ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, யாழ்.நகரப் பகுதியில் இத்தகைய பாவனைக்குதவாத பொருட்களைக் கண்டுபிடிக்கும் பணிகள் தொடர்ந்தும் நடைபெறுமென தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகரசபையினரும், தமிழீழ சுகாதார சேவையினரும் கடந்த காலங்களில் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மூன்று நாள் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

நலன்புரி அமைச்சு மற்றும் ஹேமாஸ் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாநகரசபையினரால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மூன்று நாள் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சிப் பட்டறையின் மூன்று நாள் அமர்வுகளும், நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளுக்கு நலன்புரி அமைச்சின் செயலாளர் ஜயந்த பீரிஸ் மற்றும் ஹேமாஸ் நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறைகளில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் குறித்த செயலமர்வுகளும், களப் பயிறசிகளும் வழங்கப்பட்டன என்று, யாழ். மாநகரசபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.சோமசுந்தரம் தெரிவித்தார்.

## வலி கிழக்கு பிரதேச சபைக்கு புதிய கட்டடம்

வலி கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துக்கு புதிய மாடிக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

வலி கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் புதிய மாடிக் கட்டடம், புத்தூர் உப அலுவலகக் காணிக்குள் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று 10.30 மணிமுதல் 11.30 மணிவரை செயலாளர் இ.இராசதுரை தலைமையில் இடம்பெறவுள்ளது. (90)

# குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

கோப்பாய் சந்தியிலிருந்து கைதடிக்குச் செல்லும் வீதி பழுதடைந்து குன்றும் குழியுமாக மிகமோசமான நிலையில் காணப்படுகின்றது.

பொதுமக்கள், கனரக வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களின் பாவனை கூடிய இந்த வீதியும், வீதியில் காணப்படும் பாலமும் மிக மோசமான நிலையில் பழுதடைந்து காணப்படுகின்றன.

எதிர்வரும் காலம் மழைகாலம் ஆகையால், அதற்கு முன்னர் புனரமைப்புச் செய்யாவிடின் இந்த வீதியைப் பயன்படுத்தமுடியாது இருக்குமென மக்கள் தெரிவித்தனர். (90)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*அரம்போலும் கூர்மை ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண்பு இல்லா தவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## எச்சரிக்கையும், எதிர்பார்ப்பும்

இலங்கையின் அரசியல்-மற்றும் பொருளாதார நிலமைகளில் நிலவும் ஸ்திரத்தன்மையற்ற நிலையானது- நாட்டின் சகல துறைகளிலும் பெரும்பாதிப்பை ஏற்படுத்திவருவதுடன், அரசியல்வாதிகளின் சுயநலத்துடனும், அதிகார வெறியுடனும் கூடிய ஆட்சி நிர்வாக அணுகுமுறையானது, நாட்டுமக்களின் எதிர்காலத்தோடு விளையாடும் பொறுப்புணர்வற்ற மந்த புத்திகொண்டோரின் செயற்பாடாகவும் அமைந்துவருவதால் தேசம் முற்றாக நாசமடையும் அபாயம் தோன்றியுள்ளது.

தேசத்தின் பொருளாதாரம்அதிகரித்த வேகத்தில் வீழ்ச்சி கண்டுவருவது குறித்து ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை உலகவங்கி அனுப்பி வைத்துள்ள செய்தி அனைவரும் அறிந்த விடயமே.

ஒரு நாடு பொருளாதார ரீதியில் ஸ்திர நிலையை அடைய வேண்டுமானால்- அந்த நாட்டின் அரசியலில் ஸ்திரத்தன்மை இருக்க வேண்டும். தேசிய நலனில் அக்கறையும் அதன் அபிவிருத்தியில், முன்னேற்றத்தில் ஆர்வவிருப்பும் அதற்காகவே சிந்தித்துத் திட்டங்களை வகுக்கும் ஆற்றலும் கொண்ட அரசியல்வாதிகள் அந்த நாட்டில் இருந்தால் மட்டுமே அரசியல்ஸ்திரத்தன்மை நிலவும் சாத்தியம் இருக்கும்.

இலங்கை அரசியலில் அதிகார வெறியும், ஆதிக்க சிந்தனையும், பதவிப்பற்றும், குறுகிய சுயநல அரசியல் நோக்கும் கொண்ட தேசப்பற்றும், ஜனநாயகத் தன்மையுமற்ற தலைவர்களே நாடு சுதந்திரமடைந்த காலம் முதல் இன்று வரை தொடர்ச்சியாக ஆட்சிப் பீடத்தில் மாறிமாறி அமர்ந்து வந்துள்ளார்கள் என்பதை அவர்கள் அனைவரதும் கடந்த கால செயல்முறைகளையும், அதனால் நாட்டிற்கு ஏற்பட்ட விளைவுகளையும் தேசிய நோக்குடன் ஆராய்ந்துள்ளவர்கள் நன்கறிவர்.

இலங்கை சுதந்திரமடைந்ததுமுதல் நாட்டை ஆட்சி செய்துவந்த இரு பிரதான தேசிய அரசியற்கட்சிகளும் அவற்றின் பெயர்களில் மட்டும்தான் தேசிய ஐக்கியத்தையும், சுதந்திரத்தையும் பொறித்துக் கொண்டிருந்ததேயன்றி நடைமுறையில் அவற்றின் அர்த்தத்தையோ அவசியத்தையோ புரிந்து கொண்ட தலைமைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதே நாட்டின் இன்றைய அவலங்களுக்கெல்லாம் காரணம்.

இந்த இரு பிரதான கட்சிகளும் அதிகாரத்தை, ஆட்சியை தம்வசமாக்கிக் கொள்வதற்கு தேசிய மக்களிடையேயான மத-மொழி-இனத்துவ வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒருமைப்பாட்டுணர்வை பலியாக்கத் துணிந்த முட்டாள்தனத்தின் விளைவுகளே இன்று தேசம் எதிர்கொண்டு வரும் இடர்களாகும்.

எத்தனை அழிவுகள், எத்தனை இழப்புகள் எல்லாவற்றையும் அவற்றின் பின்விளைவுகளான ஏனைய ஆபத்துக்களையும் எதிர்கொள்ளும் அபாயங்களுக்கிடையேயும், கடந்த கால வடுக்கள் கற்பித்த பாடங்களினின்றும் பாடம் கற்றுக்கொள்ளாத, சூடு,சொரணையற்ற தென்னிலங்கையின் அரசியற் தலைமைகள் தொடர்ந்தும் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் தீவிரம் காட்டும் பதவிப்பித்தர்களாகவே இருந்து வருகின்றதன் எதிரொலிதான் உலக வங்கியின் எச்சரிக்கைக் கடிதமாகும்.

அந்த எச்சரிக்கைக்கடிதம் சமாதான முயற்சிகளில் இலங்கையரசு காட்டிவரும் மெத்தனப் போக்குக் குறித்த உலக சமூகத்தின் அதிருப்தியின் தொனியையே காட்டமான விமர்சனமாக உள்ளடக்கியுள்ளதெனலாம்.

இலங்கையின் இன்றைய அவசரத்தேவை போர் விமானங்களும், யுத்தக்கப்பல்களும், ஆயுதத் தளபாடங்களும் அல்ல... சமாதானத்தின் மீதான ஆத்மார்த்தமான ஈடுபாடு மட்டுமே.

அதனைத் தென்பகுதி அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ளவில்லை. ஆனால் அதற்கும் மேலாக அவர்களின் பேரினவாத சிந்தனையுடன்கூடிய அரசியல் இலக்குகளே- அவர்களின் அணுகுமுறைத் தவறுகளே- நாட்டை அதலபாதாளத்தினுள் தள்ள முயன்றுவருகின்றது.

சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகம் இலங்கை அரசின் இந்தத் தொலைநோக்குச் சிந்தனைத் திறனற்ற நடவடிக்கைகளை புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளதன் வெளிப்பாடே உலகவங்கியின் இந்த எச்சரிக்கைக் கடிதமாகும். இது அரச மட்டத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இப்போது அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும், இலங்கைக்கான உலகவங்கியின் உதவிகள் மற்றும் கடன் வசதிகள் எதிர்காலத்தில் பாதிக்கப்படும் என்பதை, அச்ச உணர்வை அரசுக்கு ஏற்படுத்தவே செய்யும்.

இந்த அச்ச உணர்வு சமாதானப் பேச்சுக்களை அரசு முழுமையாக, விசுவாசமாக முன்னெடுக்க விரும்பாவிட்டாலும் அதைநோக்கிய நகர்வுக்கு தான் தயாராவதாக உலகிற்கு சமிக்ஞை காட்டிக்கொண்டாவது இருக்க வேண்டிய அவசியத்தை அதற்கு ஏற்படுத்தவே செய்யும்.

நேற்று முன்தினம் வன்னிக்கு வருகைதந்த ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா மற்றும் நெதர்லாந்துத் தூதுவர்களுடனான சந்திப்பின் போது- அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தென்னிலங்கை அரசியற் கட்சிகள் தங்களுடைய அதிகாரத்தை வலுவாக்கி நிலைப்படுத்துவதற்கும், அதிகாரப் போட்டிகளில் தம்மை முதன்மைப் படுத்திக் கொள்வதற்கும், தேசிய இனப்பிரச்சனையை இழுத்தடித்து அதற்குத் தீர்வுகாணும் முயற்சிகளை காலதாமதப்படுத்துவது சரியல்ல என்ற தொனிப்பட வலுவான கருத்து ஒன்றினை முன்வைத்துள்ளார்.

இந்தக் கருத்து தென்னிலங்கை அரசியல் ஆதிக்க சக்திகளின் இன்றைய போக்கின் பரிமாணத்தை வெளிப்படுத்தும் ஒன்றாகவே முன்வைக்கப்பட்டுள்ளது எனலாம். இக்கருத்தின் முழுமையான அர்த்தத்தையும் ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா மற்றும் நெதர்லாந்து தூதுவர்கள் மட்டுமல்ல ஏனைய சமாதானம் விரும்பும் நாடுகளும் கூட தெளிவாகப் புரிந்துகொண்டு, அமைதி முயற்சிகள் தொடர்பான இலங்கையரசின் அக்கறையற்ற இழுத்தடிப்பு நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அதற்கான அழுத்தங்களை அரசுக்குக் கொடுக்கவேண்டும் இல்லையேல்- உலக வங்கி உட்பட எந்த அமைப்புகளினதும், நாடுகளினதும் எச்சரிக்கைகள் யாவும் இலங்கையரசுக்கு எருமையில் பட்ட சேறாகவே இருக்கும்.

## நாடும் நடப்பும்




# யாழ்.குடாநாட்டில் புலிக்கொடி கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் யாழ்ப்பாணத்தில் 3 இடங்களிலும், திருகோணமலை இராணுவக்கட்டு ப்பாட்டுப் பிரதேசத்திலும், இராணுவத்தினரின் எதிர்ப்பை யும் பொருட்படுத்தாது கடந்த 14, 15 ஆம் திகதிகளில் 4 தடவைகள் தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு, போர்நிறுத்தக் கண்காணிப்பு க்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

வல்வெட்டித்துறை பகுதியில் குமரப்பா, புலேந்திரன் ஞாபகார்த்த தூபிக்கு அண்மித்ததாக உள்ள விளை யாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டு விழா வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. இந்த நிகழ்வில் கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் கலந்துகொ ண்டார்.

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு, மந்திகை ஆகிய இடங்களில் 14, 15 ஆம் திகதிகளில் நடைபெற்ற விளையாட்டு விழாக்களிலும் தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டுள்ளது.

திருகோணமலை, சாம்பல்தீவு, பள்ளிக்கோவில் பிரதேசத்தில் நடைபெற்ற விழாவிலும் கடற்படையின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# ஆசிரிய நியமனங்கள் குறித்து இசுறுபாயவில் கலந்துரையாடல்

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து ஆசிரியர் பயிற்சிநெறியை பூர்த்திசெய்தவர்களுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை பத்தரமுல்ல இசுறுபாயவில் உள்ள கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து வலயக் கல்விப்பணிப்பாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கல்வியியற் கல்லூரிகளின் பயிற்சியைப் பூர்த்திசெய்து வெளியேறிய ஆசிரிய மாணவர்களுக்கு, வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஆசிரிய நியமனங் களை வழங்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ள நிலையில் வடக்கு- கிழக்கு மாகாண கல்விப்பணிப்பா ளர்களுடனான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங் கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இதேவேளை,வவுனியா மற்றும் மட்டக்களப்பு கல்வியியற்கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்து வெளியேறியவர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் நியமனம் வழங்கவேண்டும் என வட-கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட வலயக் கல்விப் பணிப்பளார்கள் வலியுறுத்தவுள்ளனர்.

நாளை நடைபெறவுள்ள கலந்துரையாடல்களின் பின்னரே தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்தோருக்கான நியமனங்கள் வழங்குவது தொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (லெ)

# சட்டமாணி கற்கைநெறி யாழ்.பல்கலையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2004/2005 கல்வியாண்டில் சட்டமாணி கற்கை நெறியைத் தொடர்வதற்கு 50 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினருடனான கலந்துரையாடலின்போது இதற்கான அனுமதி பெறப்பட்டதாகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்தார்.

இதற்கமைய அண்மையில் வெளியாகிய க.பொ.த உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 50 மாணவர்கள தெரிவுசெய்யப்படவுள்ளனர். பல்கலை க்கழக அனுமதிக்காக முதலாவது படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பும் மாணவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இக்கற்கைநெறி கலைப்பீடத்தின் கீழ் நடைபெற்றாலும், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் எத்துறையில் தோற்றியவர்களும் சட்டமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

இக்கற்கைநெறியைப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு சட்டமாணிப் பட்டம் வழங்கப்படும். இலங்கையில் இரண்டாவது சட்டமாணி கற்கைநெறி யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏற்கனவே இக்கற்கைநெறி கொழும்பு பல்கலைக்கழகத்தில் மட்டும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லெ)

# ரிசாத் பதியுதீன், மஜீத் ஆகியோர் இணைந்து செயற்பட முடிவு!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதாகக் கூறப்பட்ட ரிசாத் பதியுதீன் மற்றும் மஜீத் ஆகியோர் இணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளனர். இது தொடர்பில் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவந்தது. இதன் அடிப்படையில் மூவரும் தமக்கிடையிலான வேற்றுமைகளை மறந்து செயற்பட இணக்கம் காணப்பட்டுள்ளது. இது குறித்து ஜம்மியத்துல் உலமா அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

# நல்லூர் உற்சவ காலத்தில் சுகாதாரம் பேண நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தன் உற்சவத்தை ஒட்டி பல்வேறு சுகாதார செயற்பாடுகளை யாழ். மாநகரசபையினர் முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசேட முதலுதவிப் பிரிவொன்றை அமைத்தல், 24 மணி நேரமும் தயார் நிலையில் அம்புலன்ஸ், தீயணைப்பு சேவை என்பவற்றை வைத்திருத்தல், ஆலயச் சூழலிலுள்ள பொது மலசல கூடங்களுக்கான நீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், முதலுதவிப் பணிகளில் குடும்ப நல உதவியாளரை ஈடுபடுத்துதல்,

அத்துடன் ஆலய வீதிகளுக்கு தினமும் காலையும், மாலையும் நீர் தெளித்தல், ஆலயச் சூழலிலுள்ள கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழித்தல், புதிய மலசல கூடங்களை அமைத்தல், ஆலய சுற்றுப்புறத்திலுள்ள பொதுமலசல கூடங்களுக்கு வெள்ளையடித்தல், ஆலயச் சூழல்களில் தினமும் கிருமித் தொற்றுநீக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், போன்றவாறான பொதுச் சுகாதாரத்தைப் பேணும் நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளதாகத் தெரியவருகிறது.
(31)

## நூல் நோக்கு

காவலூர் விஜேந்திரன்






**நூலின் பெயர் -**
**மின்னியக்க பத்திரிகையியல் ஓர் அறிமுகம்**
**எழுதியவர் -**
**ரூபன் மரியாம்பிள்ளை**
**வெளியீடு -**
**சவுந்தரம் பத்திரிகை இயல் நிலையம்**

இன்றைய நவீன இலத்திரனியல் யுகத்தின் மின்னியக்க பத்திரிகையியல் ஓர் அறிமுகம் நூல் காலத்திற்கேற்ற அறுவடை என்றால் அது மிகையாது. அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளையின் பத்திரிகைத் துறைசார் வெளியீடுகளில் இந்த நூல் நான்காவது படைப்பாகும்.

ஆசிரியரின் வெளியீடுகள் ஊடகத்துறையினருக்கு பேருதவி என்பது அனுபவ ரீதியான உண்மை. பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், நூல் ஆசிரியரே என்று இங்கு நினைவுகூர்வது பொருத்தமாக அமையும்.

சவுந்தரம் பத்திரிகையியல் நிலையத்தின் வெளியீடான இந்த நூலின் அட்டைப்படம் - யாழ்ப்பாணத்து தகவல் தொடர்பு கோபுரத்தைக் கொண்டுள்ளது. துரையப்பா விளையாட்டரங்கின் பக்கமாக முனியப்பர் கோவில் பின்னணியில் அமைந்துள்ளது. கோபுரத்தின் இரு பக்கமும், வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி நிலையங்களின் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மின்னியக்கப் பத்திரிகையியலின வரவு - ஊடகவியலை முழுமைப்படுத்தியுள்ளது என முதலாவது இயலைத் தொடங்கி ஒன்பது இயல்வரை, மிக விரிவாக விளக்கப்படங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தித் துறை நிறுவனங்கள் சார்பான சாதனங்கள் என நூலைத் தொகுத்துள்ளமை ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்பது உண்மை.

ஊடகவியல் என்பதை அச்சு வழிப் பத்திரிகையியல், மின்னியக்கப் பத்திரிகையியல் ஆகிய இரண்டு இயல்களின் இணைப்பு என வரையறுக்கின்றனர்.

இந்த இயலில் ஒலி, ஒளி ஊடகங்களின் பாவனையையும் அதன் செயற்பாடுகளையும் பல்வேறு கோணத்தில் முன்வைத்துள்ளார்.

ஒலி, ஒளி ஊடகங்களில் இடம் பெறும் செய்திகளை முழுமையாகவும, விரிவாகவும், சுவாரசியமாகவும் எடுத்துரைக்கும் தகுதி பத்திரிகைக்கே உரியது எனவும், முதல் தாள் செய்தியாக இருந்த போதிலும், வாசகர்கள் பத்திரிகையை வாங்குவதற்கும் இது தொடர் செயற்பாடாக இடம்பெறுவதற்கும் ஒலி, ஒளி ஊடகங்களின் பங்களிப்பை விபரித்துள்ளார்.

இலங்கை வானொலியின் ஆரம்பத் தோற்றத்தையும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இன்றைய தோற்றத்தையும், புகைப்படங்கள் ஊடாக எம் கண்முன் கொண்டு வருகிறார் நூல் ஆசிரியர். இரண்டாவது இயலில் வானொலி ஒரு கண்ணற்ற ஊடகம் என வானொலி தொடர்பான பல விடயங்களை உப தலைப்புக்களுடன் விபரிக்கின்றார்.

கண்ணற்ற ஊடகம் என்ற பலவீனத்தை வானொலி பெற்றிருந்தாலும், எண்ணற்ற கற்பனை ஊடகம் என்ற பலத்தைப் பெறுகின்றது என யதார்த்தமான கருத்தை இந்த இயலில் முன்வைக்கின்றார் நூல் ஆசிரியர்.

இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த இயல்களில் தொலைக்காட்சி தொடர்பான விபரங்கலை விளக்கப் படங்கள் மூலமாக விபரிக்கின்றார். இவை நிகழ்ச்சிகள், செய்திகள், விளம்பரங்கள் என தனித்தனியாக விபரிக்கப்பட்டுள்ளன.

செய்தி நிறுவனங்கள் அவை தொடர்பான விபரங்களுடன் விளக்கப்படங்களையும் இணைத்துள்ளமை நூலுக்கு மேலும் மெருகூட்டுபவையாக அமைகின்றதென்றால் சாலப் பொருந்தும்.

ஏழாவது இயலை இணையம் ஓர் இணையற்ற வலைப்பின்னல் என்ற தலைப்பில், வலைப்பின்னல் தொடர்பான தரவுகளை புள்ளிவிபர ரீதியாக ஆராய்ந்ததுடன், உலக நாடுகளின் வீழ்ச்சி - உயர்ச்சிகளுக்கும் இராணுவத் தகவல்களுக்குமே இது பயன்பட்டுள்ளது எனவும் இன்று விரல் நுனியில் உலகம் விரிகின்றது என கூறுமளவுக்கு வளர்ந்துள்ளது.

எட்டாவது இயலில் அச்சுப் பத்திரிகையியல், மின்னியக்க பத்திரிகையியல், முகவரிகள் என இலங்கையில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின் ஆசிரியர், செய்தி ஆசிரியர், தொலைபேசி இலக்கங்கள் என பெரும்பாலான ஊடகங்களின் முகவரிகளைக் கொண்டதுடன், புலம் பெயர் நாடுகளின் தமிழ் பத்திரிகைகள் அவற்றின் விபரங்களையும் தொகுத்துள்ளமை ஆசிரியரின் தேட லுக்கு ஒரு தக்கசான்று.

ஒன்பதாவது இயலை மின்னியகக பத்திரிகையியல், கலைச்சொறகள் என நிறைவுசெய்கிறார். இதில் 350 இற்கும் மேற்பட்ட சொற்களுக்கு நேரடியாக தமிழ் விளக்கம் கொடுத்துள்ளார்.

ஊடகத்துறையினருக்கு வழி காட்டியாக அமைந்த, அமைகின்ற ஆசிரியரின் படைப்புக்களில் இந்த நூல் விரிவாக தூர நோக்குடன் தொகுக்கப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது.

பத்திரிகையியலுக்கோர் அறிமுகம், பத்திரிகையியல் அடிப்படைகள், ஊடகவியல் கலைச் சொல் அகராதி ஆகிய நூல்களை எழுதியுள்ள ஆசிரியர் - நான்காவது நூலாக இந்த நூலை வெளியிட்டுள்ளார்.

பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம் என்ற ஆசிரியரின் முதலாவது நூல் 2001 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய விருதினையும், இலங்கை இலக்கியப் பேரவை விருதினையும் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

25 வருடகால பத்திரிகைத்துறை அனுபவத்தில் நின்று, நிதானித்து தேவையுணர்ந்து, ஆழமாகச் சிந்தித்து காலத்துக்கேற்ப அறுவடை மேற்கொள்ளும் அடிகளாரின் இவ்வாறான முயற்சிகள் வரவேற்கத்தக்கவை மட்டுமன்றி, நன்றியுடன் நினைவுகூரத்தக்கவை ஆகும்.

## ஒரு நிமிடம் சிந்திப்போம் !

### நல்ல நடத்தைகளை ஆழ்மனதில் வேரூன்றச் செய்தல் வேண்டும்

ஒழுக்க ரீதியான சில நடத்தைகள் தவறும் போது, அதனை நாம் நியாயப்படுத்துகின்றோம். எமது நடத்தைகள் தீமைகளை விளைவிப்பதை நாம் உணர்ந்தாலும், அல்லது மற்றவர்கள் நமது நடத்தையினால் பாதிக்கப்பட்டு எடுத்துச் சொன்னாலும், அதனை விட்டுவிடுவது கடினம் என்று நாம் கருதுகின்றோம்,அல்லது அதனை மாற்ற முயற்சிக்கின்றோம். எனினும் அந்தப் பழக்கவழக்கம் ஆழவேரூன்றி இருக்கிறது. இதனை மாற்றமுடியாது என்று வாதிட்டுக் கொள்பவர் களாகவும் இருக்கிறோம்.

ஆனால், நடத்தையைப் பற்றி ஆராயும் விஞ்ஞானிகள் சொல்லும் கருத்துக்கள் 'நல்ல பழக்கங்களைப் போலவே கெட்ட பழக்கங்களும் கற்றுக் கொள்ளப்பட்டு காலம் செல்லச் செல்ல வளர்த்துக் கொள்ளப்படுகின்றன' இந்தக் கூற்று உண்மை என்று சொன்னால் , கற்றுக் கொண்ட நடத்தை களை மாற்றமுடியும்.

எமது நடத்தைகள் எல்லாமே கற்றுக் கொள்ளப்பட்டவை. சிறுவயதிலிருந்து சமூகமயமாக்கலின் ஊடாகப் பெற்றுக் கொண்ட விடயங்கள் தான் எமது ஒவ்வொரு அசைவுகளும்.

நடத்தைகளை மாற்ற முடியுமென்றால், கெட்ட நடத்தைகளையும் கட்டாயம் மாற்ற முடியும். இவை மாற்றம்பெற நீண்ட காலம் செல்லலாம், அல்லது குறுகியகாலத்தில் மாற்றலாம். எது என்னவாக இருப்பினும், கெட்ட நடத்தை களை மாற்றமுடியும் என்பது நடத்தை வாதிகளின் கருத்துகளில இருந்து தெளிவாகின்றது.

தீய நடத்தைகளை அகற்ற வேண்டுமானால் ,முதலில் எமது நடத்தைகளை நாம் இனம் காண்பது அவசியம். அதில் நல்ல நடத்தைகள் எவை? தீமையான நடத்தைகள் எவை? எனப் பகுத்தறிய வேண்டியதும் அவசியம்.

கெட்ட நடத்தைகள் எம்மில் இருப்பின் அதனை திறந்த மனதுடன் ஒப்புக் கொள்ளுதல் வேண்டும். அதன் பின்னர் அந்த நடத்தையினால் வருகின்ற விளைவுகளை மீளப் பார்வை செய்ய வேண்டும்.

கெட்ட நடத்தையினால் எமக்கு நன்மை இருக்கிறதா? எனது பொருளாதாரம் பாதிக்கப்படுகின்றதா? மற்றவர்கள் சலிப்படைகிறார்களா? ஆரோக்கியத்திற்குப் பங்கம் விளைவிக்கின்றதா? மனநின்மதியைக் கெடுக்கின்றதா? போன்ற கேள்விகளை கேட்க வேண்டும்.

அதன் பின்னர் அந்தக் கெட்ட நடத்தைகளை விட் டொழித்தால் ஏற்படும் நன்மைகள் என்ன? இந்த நடத்தைகள் மாற்றம் பெறுவதினால் எவ்வாறு வாழ்வு முன்னேறும் என்று பட்டியலிட்டுக் கொள்ள வேண்டும்.

அதாவது, ஒருவர் அதிகம் மதுபோதைக்கு அடிமையாக இருப்பின் அவர் சிந்திக்க வேண்டும். இதனால் எனக்கு என்ன நன்மை, ஏன் இதற்கு அடிமையாக இருக்கிறேன்.இதனை விட்டுவிட முடியாதா?இந்தப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றால், எனது பொருளாதாரம், குடும்பம் வளம்பெறும் என்பதை அவர் உணரவேண்டும். இதனைப் போல ஒவ்வொரு கெட்ட நடத்தைக்கும் தீர்வுகாண அதிலிருந்து விலகி நடக்க முயல,சிந்திக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சில நிமிடங்கள் எமது முன்னேற்றத்தைப் பற்றிச் சிந்திப்போம், எமக்கு சறுக்கல் ஏற்படில்,என்ன சூழ்நிலையினால் அவை ஏற்பட்டது என்பதை உணர்ந்து புதிய வழிமுறைகளைக் கண்டு கொள்வோம்.

எமது தீய நடத்தைகளைப் பற்றி மற்றவர்கள் எடுத்துச் சொல்லும் போது, அதனை நாம் கோபம் கொள்ளாமல், கேட்டு அதற்கு மாற்று வழிகளை கண்டு கொள்வோம் அதைவிடுத்து எமது நடத்தைகளை நியாயப்படுத்தல் பொருத்தமற்றது.

எனவே, மாற்ற முடியாத நடத்தைகள் என்று எதுவும் இல்லை. நல்ல நடத்தைகளை ஆழ் மனதில் வேரூண்றச் செய்து வாழ்வை முன்னெடுப்போம். தீய நடத்தைகளை மாற்றுவோம்... சிந்திப்போம்... செயற்படுவோம்...

- யாழ். ராதவல்லி-

## வாலில்லாத பட்டங்கள்




பட்டதாரிகள் நியமனப் பட்டியலைப்பற்றிப் பல்வேறு தர்க்கங்கள் ஊடகங்களில் அடிபடுகின்றன. முதலாவது பட்டியலில் வெளியாகியுள்ள பெயர்களில் தெரிவு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ள நிலையில், நான்பிடித்த முயலுக்கு மூன்றுகால் பாணியில் வெளியாகியுள்ள பெயர்கள் தகுதியடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டன. ஆயினும், அடுத்த பட்டியலில் எஞ்சிய அனைத்துப் பட்டதாரிகளும் உள்வாங்கப்படுவர். எனவே, பட்டதாரிகள் குழப்பமடையத்தேவையில்லை என நிதியமைச்சு முழுப்பூசணிக்காயைச் சோற்றுக்குள் பதுக்குவதற்குப் படாதபாடு படுகிறது.

இது பட்டதாரிகளாகிய எங்களுக்குப் புரிந்தாலும், பொதுமக்களுக்கு இந்த நியமனச் சூட்சுமங்கள் விளங்குவதாயில்லை. ஏதோ பொறாமையில் குழப்புவதாக் கூட பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கிடையில் உறியடித் திருவிழாவில் முட்டிக்கிடைத்த கதையாக தமது பெயர்களும் இடம்பெறக்கண்ட சில பட்டதாரிகளும், அவர்களின் உறவுகளும் தம்மைக் காத்துக்கொள்வதற்காக உண்மைக்குப் புறம்பான கதைகளைக் காற்றடித்துப் பறக்க விட்டுள்ளனர்.

### நண்பர்கள் மூலம் கேட்டவை சில

'அரசாங்கப் பட்டம்பெற்ற ஆண்டைக் கணக்கே எடுக்கேலை. திறமைக்குத்தான் முன்னுரிமை கொடுத்துள்ளாங்கள் (Class ஐத்) தான் கவனித்திருக்கிறார்கள். அதுவும் சரிதானே திறமைக்குத்தானே முன்னுரிமை'

'என்ன பாருங்கோ என்ர பெடிச்சி போன வருஷம் தான் பாஸ்அவுட் ஆனாள் அவவுக்கு வேலை கிடைச்சிருக்கு உங்கட தம்பி பட்டம் பெற்று நாலு வருஷமாக இருக்கின்றார் அவரின்ர பெயர் வரரேல்ல!? ஏன் பாருங்கோ மாக்ஸ் ஏதும் குறைவோ?

'ஆங்கில அறிவைத்தானாம் கவனிச்சிருக்கிறாங்கள் உவங்கள் கனபேர் இங்கிலிஸ்ல பெயிலெல்லே என்ர பிள்ளை ஆங்கிலத்தில சூரப்புலி கண்டியாலோ'

'கொம்பியூட்டர் அறிவைத்தானாம் கவனத்தில் கொள்ளப்பட்டதாம் உவங்கள் விசரங்கள் அதை விளங்காமல் ஆர்பாட்டஞ் செய்யிறாங்கள்'

இவை யாழ்ப்பாண சமூகத்தில ஆங்காங்கே புகைகின்ற சில உரையாடல்கள். இந்த அனைத்துக் கூற்றுக்களும் தவறு என்பது தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு தெரிந்திருந்தாலும் சமூகத்திற்குப் புரியவைக்க வேண்டியது எமது கடப்பாடு.

அரசாங்க யந்திரத்தின் கூலிக்கு மாரடிக்கும் செயற்பாட்டால் உண்மைநிலை தவறாக அர்த்தம் கற்பிக்கப்பட்டு வருகிறது. பிறமாவட்டங்களின் நிலைப்பாடு எப்படியோ, ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் தெரிவாகியோரின் விபரங்கள் எமக்கு நன்கு தெரியும். ஏனெனில், அநேகர் ஒரே பல்கலைக்கழகத்தில் ஒன்றாகக் கற்றவர்கள். நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகின்ற விடயங்கள் பின்வருமாறு-

ஒரு குறிப்பிட்ட துறையில், குறிப்பிட்ட ஒரு பாடத்தில், முதல் வகுப்பில் சித்தியடைந்தவர் பெயர் பட்டியலில் இடம்பெறவில்லை. ஆனால், அதே பாடத்தில் இரண்டாம் மேற்பிரிவு, இரண்டாம் கீழ்பிரிவு, சாதாரண சித்தி ஆகிய நிலைகளைப் பெற்றவர்களின் பெயர்கள் தெரிவாகியுள்ளன. முதல்வகுப்பில் தேறியவர் 2000 ஆம் ஆண்டில் பட்டம் பெற்றவர் என்பதும், ஆங்கிலத்தில் அதிவிசேட சித்திகளைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால், பட்டியலில் இடம்பெற்ற பெயர்களுக்குரியோர் அவருக்குப் பின்பே பட்டம் பெற்றவர்கள் என்பதையும், சிலர் ஆங்கிலப் பாடத்தில் (E.S.L) முதற்தடவைகளில் சித்தியெய்தித் தவறியமைக்காக பல்கலைக்கழக சித்தியடைந்தோர் விபரப் பட்டியலில் இடம் பெறாதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. வருந்தத்தக்க விடயம் யாதெனில், நான் குறிப்பிடும் அனைவரும் ஒரே பிரதேச செயலர் பிரிவுக்குரியவர்கள் என்பது தான்.

ஒரு குறிப்பிட்ட துறையில் ஒரே பாடத்தினைச் சிறப்புப் பாடமாகக்கற்று, ஒரே வகுப்புத் தன்மை உடையவர்களில் 98, 99, 2000, 2001 ஆம் ஆண்டில் பட்டம்பெற்று வெளியேறி யவர்கள் காத்திருக்க 2002, 2003 இல் பட்டம் பெற்றவர்களின் பெயர்கள் தெரிவாகியுள்ளன.

ஆங்கிலப் பாடத்தில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அத்தனை பரீட்சைகளிலும் அதிவிசேட சித்தி எய்தியதுடன் முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்ற கணினிச் சான்றிதழ்களையும் கொண்டுள்ள பட்டதாரிகளின் பெயர்கள் பட்டியலில் இடம்பெறவில்லை இவர்களில் பலர் 2000, 2001 இல் பட்டம் பெற்றவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

கணினியை ஒரு அலகாகவே கற்ற விஞ்ஞானப் பட்டதாரிகளின் பெயர்கள் பல பட்டியலில் இடம்பெறவில்லை.

கணினி, ஆங்கிலப்புலமை நிரம்பப்பெற்றுள்ள சில கணினி நிறுவனங்களில் இயக்குநர்களாகவுள்ள பட்டதாரிகளின் பெயர்கள் இடம்பெறவில்லை.

நாங்கள் இங்கே கேட்க விழைவதெல்லாம் தகுதியடிப்படையிலேயே முதலாவது பட்டியல் வெளிவந்தது எனக் கூறுகின்ற நிதியமைச்சர் அவர்கள் அது எத்தகைய தகுதி என்பதனை தெளிவுபடுத்த முடியுமா என்பதே.

இதுவரை காலமும் பட்டதாரிகள் உள்வாங்கப்பட்ட போது, பட்டம் பெற்ற ஆண்டு கவனத்தில கொள்ளப்பட்டது. அவ்வாறு உள்வாங்கியும் எஞ்சியிருக்கும் வெற்றிடங்களை நிரப்ப வகுப்புநிலை கருத்திற்கொள்ளப்பட்டது. சில பதவிகளுக்கும் முற்றுமுழுதாக வகுப்பு நிலை கருத்திற்கொள்ளப்பட்டது. சில பதவிகளுக்கு பட்டத்துடன் ஆங்கில அறிவும், கணினித்துறைசார் புலமையும் கவனத்திற்கொள்ளப்பட்டது. சில பதவிகளுக்கு சிற்சில பாடங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டு முன்னுரிமை அளிக்கப்பட்டன.

ஐயா தயவு செய்து எத்தகைய தகுதிப்பாட்டை கருத்தில் நிறுத்தி முதலாவது பட்டியல் தயாரிக்கப்பட்டது என்பதை யாரேனும் தெளிவுபடுத்துவீர்களா?

நிதியமைச்சரே பட்டதாரிகளின் வாழ்க்கை 'சனிக்கிழமை அதிஸ்டம்' (சனிதா வாசனா) எனக் கருதுகின்றீர்களா?

குலுக்கிப் போட்டுத் தெரிவு செய்வதற்கு!

-பாதிக்கப்பட்ட பட்டதாரி-

**குறிப்பு: "மக்களின் குரலும் குமுறல்களும்" என்ற இந்தப் பகுதிக்குரிய விடயங்களை யாரும் அனுப்பி வைக்கலாம். அனுப்பி வைக்கப்படும் விடயங்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு.**

### மாவோயிஸ்டுகளின் அச்சுறுத்தலால்

# நேபாள தலைநகர் காத்மண்டுவில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன!

நேபாளத்தில் மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகளின் அச்சுறுத்தலை அடுத்து அங்குள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் ஹோட்டல்கள் என்பன மூடப்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையில் வர்த்தக நிலையங்களை காலவரையின்றி மூடுமாறு மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வர்த்தக நிலையங்கள் மற்றும் ஹோட்டல்களில் பணியாற்றும் ஊழியர்கள் சுரண்டப்படுவதை எதிர்த்தே இந்த அறிவித்தலை தாம் விடுத்திருப்பதாகக் கிளர்ச்சிவாதிகள் தெரிவித்திருந்தனர். ஆனால், இதனை கம்பனிகள் மறுத்துள்ளன.



கிளர்ச்சிவாதிகளின் இந்த அச்சுறுத்தலால் நோபாளத்தில் பிரபலமாக இயங்கும் தனியார் புகையிலை கம்பனி ஒன்றும் மூடப்படவுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கம்பனியின் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் - எமது கம்பனி தொடர்பாக நாம் எந்தவிதத்திலும் பாதுகாப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை எனத் தெரிவித்தார்.

நேபாளத்திலுள்ள பிரபலமான 11 கம்பனிகளை நேற்றுடன் மூடிவிடுமாறு கிளர்ச்சிவாதிகள் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் தமது ஆதரவாளர்கள் அரச படையினரால் துன்புறுத்தப்படுவதனைக் கண்டித்து, தலைநகர் காத்மண்டுவுடனான தொடர்பை வீதிகளை மறித்து இன்று துண்டிக்கப்போவதாகவும் கிளர்ச்சிவாதிகள் அச்சுறுத்தியுள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் தலைநகர் காத்மண்டுவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகளைப் படையினர் பலப்படுத்தியுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்பை யடுத்து ஹோட்டல்களில் தங்கியிருந்த பெருமளவான உல்லாசப் பயணிகள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

# பாக்தாத்தில் குண்டுவெடிப்பு நால்வர் பலி 24 பேர்காயம்

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் நான்கு பேர் கொல்லப்பட்டதுடன் 24 பேர் காயமடைந்தனர்.

இந்த குண்டுவெடிப்புச்சம்பவம் பாக்தாத்தின் அல் ரஸீத் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்றது. ஆனாலும், இந்தக் குண்டவெடிப்பு கார் மூலம் நடத்தப்பட்டதா அல்லது மோட்டார்த் தாக்குதலா என்பது தெளிவாக தெரியவரவில்லையென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் ஈராக்கில் 100 அங்கத்தவர்களைக் கொண்ட இடைக்கால நிர்வாக சபையைத் தெரிவதற்கான கூட்டம் மூன்றாவது நாளாகவும் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட பிரதேசம் வர்த்தக நகரெனவும், இங்கு பெருமளவானோர் நின்றதாகவும் தாக்குதலின் பின்னர் காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் ஈராக்கிய உள்துறை அமைச்சு தெரிவித்தது.

அத்துடன் இந்தத் தாக்குதல் கார் மூலமே நடத்தப்பட்டதாக உள்



துறை அமைச்சு தெரிவித்தது. ஆனாலும் மற்றய அதிகாரிகளின் கருத்துப்படி இது ஒரு மோட்டார்த் தாக்குதல் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு மோட்டார்குண்டுகள் வியாபார நகரமான அல் -ரசீத் மாவட்டத்தில் விழுந்ததாகவும் மூன்றாவது குண்டு இடைக்கால நிர்வாக சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பகுதியில் விழுந்து வெடித்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடைக்கால நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு நடந்த வேளையிலும் கிளர்ச்சிவாதிகள் மோட்டார்த் தாக்குதலை நடத்தியதில் இருவர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### புளோரிடா மாநிலத்தில்

# புயல் பாதித்த பகுதிகளை அதிபர் புஷ் பார்வையிட்டார்!



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வீசிய புயல்க்காற்றில் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்தன. பலத்த மழையுடன் வீசிய சூறாவளிக்காற்றில் சிக்கிய ஏராளமான கார்கள் தூக்கிவீசப்பட்டன. இந்தப் புயல்க்காற்று, மழைக்கு இதுவரை 16 பேர் பலியாகியுள்ளனர்.

1100 கோடி டொலர் வரை இதனால் சேதமடைந்துள்ளது. தேர்தல் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருந்த அதிபர் ஜோர்ஜ் புஷ் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

புந்தா கோர்டா கிராமத்தில் அவர் பாதிக்கப்பட்ட பெண்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். நிவாரண உதவிகளை விரைவுபடுத்தவும் அவர் உத்தரவிட்டார்.

# வறட்சியின் தாண்டவம்



இந்தோனேஷியாவின் சில பகுதிகளில் பலத்த மழை பெய்து வந்தாலும் மத்திய ஜாவா மற்றும் சில பகுதிகளில் கடும் வறட்சி நிலவுகிறது. பல ஆண்டுகளாக மழையே பெய்யவல்லை தண்ணீருக்கு பொதுமக்கள் பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டி இருக்கிறது.

பயோலாலி பகுதியில் ஆற்றங்கரையில் பொது மக்கள் தோண்டிய ஒரு ஊற்றில் இருந்து ஒரு சிறுமி தண்ணீர் எடுக்கும் காட்சி.

# படையினரை ஏற்றிச்சென்ற ஹெலி மலேசியாவில் காணாமற் போனது

(கோலாலம்பூர்)

மலேசிய விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்று, இராணுவத் துருப்புகளை இந்தோனேஷிய எல்லையோர இராணுவ முகாமுக்கு ஏற்றிச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்தது.

போர்னியா தீவிலுள்ள சரவாக் மாநிலத்தின் மீது, இந்த ஹெலிகொப்டர் 10 வீரர்களுடன் பறந்தபோது காணாமல் போய்விட்டது.

இதே இடத்துக்கு அருகேதான் கடந்த மாதம் ஒரு ஹெலிகொப்டர் தரையில் விழுந்தது. இதில் 7 பேர் பலியானார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.


இலவச

நடமாடும் சேவை வாரம்

metropolitan இணைந்த சேவை NAVAKALA



திங்கள் 16 ஆம் திகதி முதல்
வெள்ளி 20 ஆம் திகதி வரை

உங்களை வரவேற்கிறது
வாருங்கள்....

இல.200 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.
(அல்லது)
அழையுங்கள்....

(021)222 5461 5462
(பிரத்தியேக சேவைத் தொடர்பு)

இலவச தொழில்நுட்பக் கவனிப்பும் சேவையும் சகல
மெற்றொபொலிடன் உபகரணங்களுக்கும் வழங்கப்படும்

Canon கொப்பியர் Canon பக்ஸ் இயந்திரம் Superfax
டுப்ளிகேட்டர்ஸ் மற்றும் இதர....

நன்றி.

T.P. 021 - 222 2561
021 - 222 5462

நவகலா,
200 K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2941)



யாழ். வணிகர் கழகம் நடாத்தும்

2004

ஆகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை
யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இந்தக் கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள், கல்வி அறிவியல் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றி பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/2937)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 10 | 5 | 2 | 17 |
| ஐக்கிய அமெரிக்கா | 6 | 6 | 6 | 18 |
| அவுஸ்ரேலியா | 6 | 3 | 5 | 14 |
| ஜப்பான் | 6 | 2 | 1 | 9 |
| உக்ரெய்ன் | 3 | 1 | 1 | 5 |
| ரஷ்யா | 2 | 5 | 3 | 10 |
| இத்தாலி | 2 | 3 | 2 | 7 |
| பிரான்ஸ் | 2 | 2 | 4 | 8 |
| கிறீஸ் | 2 | 0 | 1 | 3 |
| துருக்கி | 2 | 0 | 1 | 3 |
| ஜேர்மனி | 1 | 2 | 1 | 4 |
| தென்கொரியா | 1 | 1 | 2 | 4 |
| ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| தாய்லாந்து | 1 | 0 | 2 | 3 |
| றோமேனியா | 1 | 0 | 1 | 2 |
| தென்னாபிரிக்கா | 1 | 0 | 0 | 1 |
| ஐக்கிய அரபு | 1 | 0 | 0 | 1 |
| நெதர்லாந்து | 0 | 2 | 3 | 5 |
| கொரியா | 0 | 2 | 1 | 3 |
| ஆஸ்திரியா | 0 | 2 | 0 | 2 |
| போலந்து | 0 | 2 | 0 | 2 |
| பிரிட்டன் | 0 | 1 | 1 | 2 |
| ஸ்லோவாக்கியா | 0 | 1 | 1 | 2 |
| சிம்பாப்வே | 0 | 1 | 1 | 2 |
| ஸ்பெயின் | 0 | 1 | 0 | 1 |
| ஜோர்ஜியா | 0 | 1 | 0 | 1 |
| இந்தோனேசியா | 0 | 1 | 0 | 1 |
| இந்தியா | 0 | 1 | 0 | 1 |
| போர்த்துக்கல் | 0 | 1 | 0 | 1 |
| சேர்பியா | 0 | 1 | 0 | 1 |
| கியூபா | 0 | 0 | 4 | 4 |
| பெல்ஜியம் | 0 | 0 | 2 | 2 |
| பல்கேரியா | 0 | 0 | 2 | 2 |
| ஆர்ஜன்ரீனா | 0 | 0 | 1 | 1 |
| கனடா | 0 | 0 | 1 | 1 |
| கொலம்பியா | 0 | 0 | 1 | 1 |
| செக் | 0 | 0 | 1 | 1 |
| மொங்கோரியா | 0 | 0 | 1 | 1 |
| ஸ்லோவானியா | 0 | 0 | 1 | 1 |

# அரசுடன் இணையும் விவகாரம்
# ஜனாதிபதி சந்திரிகாவுடன் தொண்டமான் இன்று சந்திப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைவது குறித்த சிக்கல் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இன்று ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியலமைப்பு யாப்பினைத் திருத்துவது தொடர்பாகவும் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவை பதவியிலிருந்து நீக்குவது குறித்தும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானிடம் அரசாங்கம் ஆதரவு கோரியிருந்தது.

அரசாங்கத்தின் இந்த ஆதரவு கோரல் தொடர்பாக ஆறுமுகன் தொண்டமான் உடன்பாடெதனையும் தெரிவிக்காததுடன் அரசாங்கத்துடன் இணைவது குறித்த தனது முடிவினையும் மேலும் சிறிது காலம் ஒத்திப்போட எண்ணியுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவித்திருந்தன.

இவ்வாறான சிக்கல் நிலையிலேயே தொண்டமான் இன்று ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இம் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் அரசாங்கத்துடன் இணைவது குறித்து ஏற்கனவே செய்திகள் வெளிவந்திருந்தமையும் தெரிந்ததே. (தே)

## சின்ன பாலா கொலைக்கு பிரதம மந்திரி கண்டனம்!

(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் பாலநடராஜ ஐயர் (சின்னபாலா) கொலைசெய்யப்பட்டது குறித்து பிரதமர் கண்டனம் தெரிவித்துள்ளார். தமது கருத்துக்களை சுதந்திரமாகத் தெரிவிக்கும் உரிமை சகலபிரஜைகளுக்கும் உண்டு. தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் மக்களின் உரிமை மீறப்படுவதும், அரசியல் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதைத் தடுப்பதும் பாரதூரமான குற்றமாகும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

**அரசியல் யாப்பு சீரமைப்பு**

## அமைச்சின் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்!

(யாழ்ப்பாணம்)

அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அமைச்சின் அதிகாரிகள் இருவர் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முயற்சிகளைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காகவும், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆராய்வதற்காகவுமே இந்த அதிகாரிகள் வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் யாழ்.செயலகத்தில் அபிவிருத்தி மற்றும் சமாதான முயற்சிகள் குறித்து பிரதேச செயலர்களுடன் கூடி ஆராய்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# பொலிஸ் மா அதிபரின் பதவிக்காலம் நீடிப்பு!

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடைகிறது. எனினும், விசேட ஏற்பாட்டின்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரின் பதவியை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை நீடித்துள்ளார்.

ஏற்கனவே இந்திர டி சில்வாவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்ட அதேநேரம் அவருக்குப் பதிலாக அடுத்த பொலிஸ் மா அதிபராக பொறுப்பேற்கவிருப்பவரின் பெயர் இது வரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# இரண்டு இலங்கையர்களுக்கு குவைத்தில் மரணதண்டனை!

கொலைக்குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்ட இரண்டு இலங்கையர்களுக்கு குவைத்தில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

மாகன்ருகாசா என்பவரைச் சுட்டுக் கொன்றதுடன் கொள்ளைச் சம்பவத்திலீடுபட்டமைக்காகவே இவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

1995 ஆம் ஆண்டு இவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டது. விசாரணைகளின் முடிவில் கனிசெரின் நிஸ்தார், அப்துல் உசேயின் அகமட் ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

கொலை, கற்பழிப்பு, போதைவஸ்துப்பாவனை மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு அரேபிய நாடுகளில் பகிரங்க மரணதண்டனை விதிக்கப்படுவது வழமையானது என்பது குறிப்பிடத்தக்கது.

## சந்தேகமான இழுவை...

றைய கண்ணாடி இழைப் படகுக்கு சந்தேகத்துக்கிடமான பெட்டிகள் இறக்கப்பட்டன. இவற்றில் ஆயுத தளபாடங்கள் இருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்த கண்ணாடி இழைப் படகு கரையில் கொண்டுசென்று அவற்றை இறக்கிவிட்டு மீண்டும் திரும்பிவந்து பொருட்களை ஏற்றிச்சென்று, கடற்கரையில இறக்குவது கடற்படையினரால் அவதானிக்கப்பட்டது.

இதையடுத்து இது தொடர்பான தகவல்கள் முல்லைத்தீவிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளை சாலைப் பகுதிக்குச் சென்று சோதனையிடுமாறு கடற்படையினர் கோரிக்கை விடுத்தனர். எனினும் இழுவைப் படகுக்கு அருகில் சென்று சோதனைகளை மேற்கொள்ள கடற்படையினருக்கு புலிகள் அனுமதி வழங்கவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது.

### பட்டதாரிகள்...

னர் தாம் தெரிவுசெய்ததுறைக்கு அனுப்பிவைக்கப்படுவர்.

57 ஆயிரம் பட்டதாரிகள் வேலை கோரி விண்ணப்பித்துள்ளனர். வேலை பார்க்கும் பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர் இன்னமும் 41 ஆயிரம் பட்டதாரிகள் வேலையற்றிருப்பதாக அரசாங்கம் ஊர்ஜிதம் செய்தது.

முதலாவது கட்டத்தில் தெரிவு செய்யப்படாத பட்டதாரிகளின் பெயர்கள் அடுத்த மாதம் இறுதிக்குள் அறிவிக்கப்படும் என்று முகாமைத்துவத் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை எஞ்சியுள்ள 41 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர்விபரம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வெளியிடப்படவிருப்பதாக அரசாங்கம் மேலும் அறிவித்துள்ளது.

### நாட்டுப் பற்றாளர்...

கிளிநொச்சியிலிருந்து பூதவுடல் நேற்றுமாலை அவரது சொந்த இடமான வேலணை - புளியங்கூடலில் அமைந்துள்ள சிறுவர் நலன்புரி நிலையத்தின் பொதுமண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் வேலணை பிரதேச செயலகத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, போராளிகள், பொது மக்கள், பிரதேசசெயலக ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இன்று ஆனைப்பந்தி - நாவலர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் இறுதி அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

### இலங்கைக்கான...

னாட்சி அதிகார யோசனைக்கு மாற்று யோசனை ஒன்றை அரசாங்கம் தயாரித்து வருவதான செய்தி மீண்டும் இந்த விடயத்தில் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதியுடனான..

சுமத்தி, கூட்டுத்தாபன ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவது என்ற உறுதிமொழியின் அடிப்படையில் ஊழியர்கள் நேற்றுவரை தமது வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

ஜனாதிபதியுடனான பேச்சுக்கள் தோல்வியடையும் பட்சத்தில் மீண்டும் தாம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகவும் ஊழியர்கள் எச்சரித்துள்ளனர். ஊழியர்களில் பெரும்பாலானோர் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கம், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியின் தொழிற்சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## மரண அறிவித்தல்

**விசுவலிங்கம் நடராஜா**

**(ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகஸ்தர்)**

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும், ஜெயந்திநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும்கொண்ட ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகஸ்தர் விசுவலிங்கம் நடராஜா 17.08.2004 நேற்று மாலை 6 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் தங்கரத்தினத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு இராசம்மாவின் அன்பு மருமகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தினி, காலஞ்சென்ற சிவகுமாரன், சுபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாதேவா, காலஞ்சென்ற கல்யாணி, சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்யா, தாமரா, பகலவன், புகழ்நிலா, தமிழ்முகிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 18.08.2004 இன்று மாலை 4 மணிக்கு இல 288 ஜெயந்திநகரிலுள்ள தற்காலிக இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-2953)




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.